தென்றல்
மலர் 4 :: 31-8-57—சனி :: இதழ் 9

தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

அன்னை

★ கண்ணதாசன் ★

அன்னை !
கருவிலும் சுமந்தாள்
சிறு,
உருவையும் சுமந்தாள்.
கண்கள் மூடில...!
ஈ அமர்ந்ததா,
எறும்பு மொய்த்ததா,
கொசு கடித்ததா,
கூவி அழுததா...
'ஐயோ ! ஐயோ !'
குரல் கேட்கும் !
இரண்டு கைகள் நீளும்...
அள்ளி அணைக்கும்...
அழாதே! அழாதே!
ஆறுதல் கூறும் !
'ராசாக்கள் மத்தியிலே
நாடிக் கொலுவிருக்கும்
சிராளா ! கண்ணுறங்கு !'
தாலாட்டுமெல்ல எழும் !
மன்னனாய்,
மந்திரியாய்,
கோடிக்கு அதிபதியாய்,
பிள்ளை வளரப் பேராசை...
அது தாலாட்டு !
"என் மகனைப் பார்த்தாயா?
சிரிக்கிறான் ! அப்பப்பா !.
சத்தம்போட்டுச் சிரிக்கிறான் !"
தாய்உள்ளம் விரிகிறது.
அன்பு புனலாகிறது...
ஆறாகப் பெருகுகிறது.
'அம்மா !' சொல்லு !
'அப்பா !' சொல்லு !
பிள்ளை சிரிக்கிறது...
குளறுகிறது !
'அப்பா' சொல்கிறான் !
'அம்மா !' சொல்கிறான் !
"பேசாதேடா கண்ணு !
'திட்டி' படும் !"
"அடியே ! கொஞ்சம் உப்புக்
கொண்டுவா !
திட்டி சுத்திப்போட வேண்டும் !
'ஆனா' சொல்லு...
'ஆவன்னா' சொல்லு...
'படம்' எழுது !
படிக்கிறானடி என் மகன் !
அவ்வளவு சமத்து !
இது யாருக்கு வரும்?
தவமிருந்து 'பெத்த' பிள்ளை !
கன்னத்தில் பொட்டுலவையடி !
ஒரு களங்கமாவது இருக்கட்டும்!
இல்லையென்றால் 'கண்ணேறு'
படுமடி !
துல்லியமானவன் என்மகன் !
தம்பீ !
'அக்கா'வுக்கு எவ்வளவு
சீதனம் தருவாய் !
ஆயிரமா ? எவ்வளவு ?
ஆ ! ஆ ! பார்த்தீர்களா ?
இரண்டு கைகளையும்
காட்டுகிறான் !
பத்து லட்சம் தருவானாம் !
போதுண்டா ராசா !
புதுச்சட்டை வேணுமா ?
இதோ ! இதோ ! போட்டுக்
கொள் !
சாப்பிடு தம்பி !
கொஞ்சம்...கொஞ்சம்...
இதோ பார் ! அதிரசம்
இப்படி உட்கார்...சாப்பிடு...
பள்ளிக்கு நேரமாகிவிட்டது...
ஒன்று...
இரண்டு...
மூன்று...
நான்கு...எட்டு...
எட்டாவது படிக்கிறான், மகன் !
கதை எழுதுகிறான்...
கவிதை பாடுகிறான்...
ஊரில் இருப்பதும் பிள்ளை தான்.
என் பிள்ளையும் பிள்ளை தான் !
இவ்வளவு புத்தி யாருக்கு
எட்டும் !
'தானாப் படிச்ச' சமத்தன் !
இருபது ரூபாய் தந்தான், மகன்!
கதை எழுதியதற்கு வந்ததாம் !
ஊரில் எல்லாரும் பேசுகிறார்கள்!
'உன் பிள்ளை சமத்து'
என்கிறார்கள் !
"பாற்கடலு முத்தெடுத்து
பகட்டா விலை பேசும்
பாண்டியரைப் பெத்தவள்
நான்"
பையனுக்கு விரலில் வீக்கமாம் !
பாவிகள் ! யாரோ கண்வைத்து
விட்டார்கள் !
உடனே வரச்சொல்லி எழுது !
மகனைப் பாராவிட்டால் செத்து
விடுவேன் !
அடி ! கோழி கொண்டு
வருகிறான் !
வாங்கி விடடி !
பொங்கலுக்குத் தம்பிவருவான்!
கோழி அவனுக்கு ரொம்பப்
பிரியம் !
கொஞ்சம் தேன்குழல்
சுற்றணும் !
முறுக்குச் செய்யணும் !
பட்டணத்தில் இதெல்லாம்
கிடைக்காது.
தம்பீ ! வாடா ! எப்ப வந்தே ?
உடம்பு இளைத்துவிட்டதே !
—மகன் சிரிக்கிறான்.
—தாய், கண்ணீர் வடிக்கிறாள்...
—உடம்பு நன்றாகத்தான்
இருக்கிறது !
—தாயின் இதயம் விரிந்ததால்...
பிள்ளை உடம்பு இளைக்கிறது !
ஏ ! பொண்ணு ! நீ இரு !
நான் போய் கீரை வாங்கி
வருகிறேன்.
சந்தைக் கீரையில் பூச்சி
இருக்கும் !
ஆச்சி வீட்டுத் தோட்டத்துக்
கீரை வாங்குகிறேன் !
'தயிரு நாலு போகணி' வாங்கு !
தம்பீ ! சட்டையைக் கழற்றி
விட்டுக் குளி !
கண்மாய்க்குப் போகாதே !
ஆழம் அதிகம் !
வெந்நீர் போடச் சொல்கிறேன் !
இன்றே புறப்படுகிறாயா ?
இவன் இப்படித்தான் !
எப்ப வந்தாலும், வெந்நீரைக்
காலில் கொட்டிக்
கொண்டுதான் நிற்பான் !
இரண்டு நாள் கழித்துப்
போயேன் !
அண்ணனும் எப்போதாவது
தான் வருகிறான் !
நீங்கள் இல்லாமல் வீடு வெறிச்
சோடிவிட்டது !
நாலு நாளாவது நிம்மதியாக
இரேன் !
பணம் சம்பாதித்து என்ன
கண்டீர்கள் !
—பையனுக்குத் திருமணம் !
—தாய் உட்காரவே இல்லை !
—நடக்கிறாள்; பறக்கிறாள்!
அதை எடு ! இதை எடு !
பட்டு உடுத்தச் சொல் !
பெண்ணைக் கூட்டிவா !

திருப்பூட்டும் வேளை வந்து
விட்டது !
ஒருத்தி கேட்கிறாள்.
"இவர்கள் தான், மாப்பிள்ளை
யின் தாயாரா ?"
—தாயின் காதில் இது விழு
கிறது !
"பையன் கெட்டிக்காரன் !"
—தாய் இதையும் கேட்கிறாள் !

— [illegible] —

★ இதுதான் ரஷ்யா! ★

கடந்த நான்கு இதழ்களில் ரஷ்யாவைப் பற்றிய கருத்துக்களை நான்கு இளம் எழுத்தாளர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியிருந்தார்கள். இந்த இதழில் தோழர் இளஞ்சேரன், ரஷ்யாவின் பூர்விகத்தை ஆராய்ந்திருப்பதோடு, ஸ்டாலின் சித்தாந்தத்தின் விளைவு, தெளிவுகளையும் எடுத்து விளக்கியிருக்கிறார். இந்த வரிசையில் இதுவே இறுதிக் கட்டுரை. [ஆ-ர்.]

— எழுதியவர் —
இரா. இளஞ்சேரன்

லெனின் மறைவோடு ரஷ்யாவில் போல்ஷிவிக் இயக்கத்தின் பிரசித்தமான போராட்ட சரித்திரம் முற்றுப்பெற்றது.

அவரது எல்லையற்ற மேதாவிலாசத்திலே உருவான கட்சி அழியாத செல்வமாக பின்னைய வாரிசுகளுக்குக் கிடைத்தது. டிராட்ஸ்கி, புகாரின், ரொடாக், கிராவ் போன்றோரை மக்கள் இதயத்தெளிவோடு புதிய தலைவர்களாக வாழ்த்தி வரவேற்றார்கள்.

ரத்தவெறி பிடித்த 'ஜார்ஜியா மனிதனை' ஸ்டாலின், கட்சியின் மூன்றாவது நிலையிலே இருந்தார். ரஷ்ய மொழியை முரட்டுத்தனமாக உச்சரிக்கும் அந்த அபாயகரமான பேர்வழியைக் குறித்து லெனின் தமது இறுதிநாட்களில் எச்சரிக்கை செய்திருந்தார். 'டிராட்ஸ்கியும் லெனினும்' என்ற கூட்டுப்பெயர் ஸ்டாலினுக்கு பொறாமையைத் தந்தது. பிறர் புகழடைவது கண்டு சகிக்காத அவரது பண்பை இயக்கத்தில் எல்லோரும் புரிந்துகொண்டிருந்தார்கள்.

லெனின் விழித்தார்; ஆனால் அது காலம் கடந்த விழிப்பாயிருந்தது! உரிய நேரத்தில் அவரது எண்ணம் நடைமுறையாயிருந்தால் சோவியத்தின் சரித்திரமே வேறு

வெறுக்கும் வகையில் அவர்களது 'வசைமாரி' வளர்ந்தது. சில ஆண்டுகளில் காமனேவை ஒழித்துக்கட்ட ஸ்டாலினுக்கு இந்த வெறுப்பு பெரிதும் பயன்பட்டது!

நிராதரவான நிலையில் டிராட்ஸ்கி ரஷ்யாவிலிருந்து வெளியேற்றப் பட்டார். பிரான்ஸ், துருக்கி, நார்வே போன்ற நாடுகளிலும் ஸ்டாலினின் அதிகார அம்புகள் அவரை அமைதியாக வாழவிடவில்லை. இறுதியாக மெக்ஸிக்கோவில் டிராட்ஸ்கி — ரஷ்யாவின் மகத்தான சிந்தனையாளன்—பனிபிளக்கும் கோடரியால் வெட்டிச் சாய்க்கப்பட்டார்! காமனேவ், ஸினோவிவ் இவர்களை ஒழிக்க புகாரின், ரீகாவ், டோம்ஸ்கி போன்றோரை ஸ்டாலின் தன்னோடு சேர்த்துக்கொண்டார்.

ரகசியப் போலீஸ் அதிகாரி யகோதா ஸ்டாலினின் மனம் கவர்ந்த தோழர் காமனேவ், டிராட்ஸ்கி போன்றோரை ஸ்டாலின் திருவுள்ளப்படி யகோதா பொதுவுடைமை பூதத்திற்கு பலியிட்டவர். பிரசித்தமான மாஸ்கோ வழக்குகளின் சிருஷ்டிகர்த்தாவும் இவரே. துரோகிகளைப் பிடித்து சமதர்ம தேவனும் ஸ்டாலினுக்கு காணிக்கை வழங்கிய பரமபக்தனை யகோதா 1938-ல் துரோகியாக குற்றம் சாட்டப்பட்டு சுட்டுக்

லெனின் இதற்கு சிறப்புரை அளித்தார். இந்த வரலாற்றில் ஸ்டாலின் பெயரே குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் அவர் செயல் வீரரல்ல. எழுத்தாளரோ, பேச்சாளரோ அல்ல; டிராட்ஸ்கி குறிப்பிட்டாற்போல 'குறுகிய லட்சியம்கொண்ட சுய மாகாணப் பித்தர்'. அதிகார மோகத்தால் இரண்டாந்தர செல்வாக்கை எல்லை மீறிப் பயன்படுத்தியதால்தான் ஆதிக்க சக்கரம் ஸ்டாலினிடம் சிக்கியது! 'பாரைக் குலுக்கிய பத்து நாட்கள்' என்ற அந்த புரட்சி ஏடு ஸ்டாலின் அதிகாரம் பெற்றவுடன் தடை செய்யப்பட்டது. அரசியல் நிர்வாகத்தில், பொறுப்பான பதவிகளில் பழைய போல்ஷிவிக் இயக்கத்தலைவர்கள் வீற்றிருப்பது ஸ்டாலினுக்கு பெரும் தடையாயிருந்தது. இவர்களை ஒழித்துக்கட்டிவிட்டு தனக்கு புகழ் பாடிக்கிடக்கும் 'சீடகோடிகளை' அதிகாரிகளாக நியமிக்க ஸ்டாலின் தமது சரித்திரப் பிரசித்தி பெற்ற கோடுகளைக் கிழித்தார். இயற்கையிலேயே ஜார்ஜியர்கள் ரத்தவெறி பிடித்தவர்கள்! தீர்த்துக் கட்டுவது ஒரு தேசியப் பண்பாக மாறுமளவிற்கு கொடுமைகள் குவிக்கப்பட்டன. எத்தனை எத்தனை அரசியல் மேதைகள், அறிவியல் நிபுணர்கள், ஆற்றல் இளைஞர்கள்... இவர்களின் விபரத்தை தொகுப்பதென்றால் அதுவே பெரிய வரலாறாகிவிடும்!

புதியதோர் உலகு செய்ய போராடிய வீரர்களுக்கு ஸ்டாலின் கட்டிக் கொடுத்த சமதர்ம பலிபீடம்...

'மக்கள் துரோகி' என குற்றம் சாட்டப்பட்டு கொல்லப்பட்டார்.

காரகான், ரஷ்யாவின் வெளிநாட்டு அமைச்சர். அழகான தோற்றமுள்ளவர். மாஸ்கோ நாடகசாலையின் ஆடலழகியான மரீனா ஸெமெனோவா இவரது துணைவி. காரகான் திடீரென கைது செய்யப்பட்டார். டிசம்பர் பதினாறும் தேதி துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட இவரது பிணம் எங்கோ புதைக்கப்பட்டது. இந்த விசாரணைக்கு அரசியல் காரணம் எதுவும் கற்பிக்கப்படவில்லை. காதல் விவகாரத்தில் ஸ்டாலினை பகைத்துக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது!

1938-ல் டாக்டர் லெவின் எனும் நல்லறிவாளர் மாஸ்கோ வழக்கு மன்றத்தில் விசாரிக்கப்பட்டார். கார்க்கியைக் கொன்றதாக குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டு மரண தண்டனையும் அளிக்கப்பட்டது.

ரகசியப் போலீஸ் அதிகாரி யகோதாவின் வற்புறுத்தலால் கார்க்கியின் மரணத்தை துரிதப்படுத்தியதாக டாக்டர் லெவினின் ஒப்புதல் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. யகோதா ஸ்டாலினின் 'வலது கை' என்பது பிரசித்தம்.

ஸ்டாலினின் புகழ்பெற்ற 'கம்யூனிஸ கண்டுபிடிப்புகளில்' மாஸ்

பொற்சிலுவையைத் தூக்கி எறிந்தார் லெனின்!

விதமாயிருக்கும்! டிராட்ஸ்கி கொஞ்சம் துணிச்சலோடு பேசியிருந்தால்கூடப் போதும்! ஸ்டாலினின் பாதம் கிரெம்லினில் படிந்திருக்காது!

மார்க்ஸியத்தின் பக்குவமற்ற சோதனைக்கு இத்தனை பெரிய நிலப்பரப்பு பலியாவதையும் தவிர்த்திருக்கலாம்! 'ஸ்டாலினை நீக்க வழி காண' என்ற தலைப்பில் லெனின் எழுதியிருந்த உயில் அப்போதைக்கு மறைக்கப்பட்டது. டிராட்ஸ்கி பதவி மோகம் கொண்டவரல்ல. கற்றறிந்த அரசியல் ஞானி; அமைதியான தன்மையினர்; தலைசிறந்த எழுத்தாளர். ரஷ்ய நாடு அவரை பூரணமாக உணர்ந்திருந்தது. கட்சியின் இரண்டாந்தர தலைவரான ஸ்டாலினின் சதிக்கு பலியாகிவிடுமளவிற்கு டிராட்ஸ்கி நல்லவராயிருந்தார். ஸ்டாலின் டிராட்ஸ்கியை வெளிப்படையாக எதிர்த்து கட்சியினரின் வெறுப்பைத் தேடிக்கொள்ளவில்லை. அந்த எதிர்ப்புத் திருப்பணிக்கு பிரபல தலைவர்களான காமனேவையும், ஸினோவிவையும் அவர் தயாரித்தார். ஸ்டாலினின் தூண்டுதலால் அவர்கள் டிராட்ஸ்கியை எல்லா சந்தர்ப்பங்களிலும் திட்டிப் பேசினார்கள். இயக்கத்தின் பெரும்பான்மையினர் காமனேவை

கொல்லப்பட்டார்! 'யசோவா' எனும் ஸ்டாலினின் புதிய சீடன் தண்டனையை நிறைவேற்றி வைத்தான். இதே யசோவாவைத்தான் பின்னர் ஸ்டாலின் தீர்த்துக்கட்டினார்.

இந்த சம்பவங்களை படிக்கும் போது கிருத்துவ சுவிசேஷத்தின் நினைவுதான் வரும். அடுத்துக் கெடுப்பதில் ஸ்டாலின் பெற்றிருந்த ஆற்றலைப் புகழத்தான் வேண்டும். சரித்திரமே கண்டிராத கொடுமைகளை கட்சித் திட்டங்களாக்கிய பெருந்தகை அவர். சோவியத் சமதர்மத்தை தெரிந்து கொள்ளவேண்டுமானால் ஸ்டாலினை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். விரிந்து பரந்த ஒரு சாம்ராஜ்யமே அந்த சுட்டுவிரலில் ஊசலாடிற்று! உலகத்தின் பெரும் பகுதியில் அவரது அதிகாரம் செல்லுபடியானதென்றால் அது சாமான்யமல்ல.

டிராட்ஸ்கி முதல், பெரியாவரை பலியானோரின் வரலாற்றிலே ஒரு ஆதிக்க பரம்பரையின் வெறியாட்டமே நிழலிடுகிறது என்பதை மறுப்பதிற்கில்லை.

பேராசிரியர் ஜான்ரீட் 'பாரைக் குலுக்கிய பத்து நாட்கள்' எனும் பெயரில் அக்டோபர் புரட்சி வரலாற்றை நூலாக எழுதினார்.

பூசி மெழுகப்பட்ட ரத்தச்சோறு... வால்கா நதி வெள்ளப் பெருக்கால் கூட அந்தக் கொடுமைகளைக் கழுவ முடியாது! அத்தனை பயங்கரமான படலங்கள்.

கொசேவ்ஸ்கி, லியான் கரகான், ஜுடிமன், உஸ்டினுவ், ஊபார்விச், யாக்கிர், பிரைமாகாவ், பெல்டுமன், கார்க், டௌட்டியான், மார்ஷல் கெரால், அட்மிரல் ஆர்லோவ், எரிக் ஆஸ்மஸ், பெக்ஸடியான், ரோஸன்பார்க், யாகூபோவிச், போரிஸ் போடஸ்கி, மார்ஷல் புளுசர், ஜெனரல் ஆல்க்ஸனிஸ், யூரனேவ்.

இவர்களெல்லாம் லெனினின் தோழர்கள்; புரட்சியோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு தியாகத் தழும்புகளைப் பெற்றவர்கள். ஸ்டாலின் தமது ஆதிக்க விரிவிற்காக இவர்களைக் கொன்று குவித்தார்.

பயடாகாவ், போல்ஷிவிக் இயக்கத்தின் செயல்வீரர்; புகழ்பெற்ற அரசியல் ஞானி; மத்திய சோவியத்தில் மிக்க செல்வாக்கு பெற்ற இவர் தமது நாடான உக்ரைனில் முதன் முதலாக பொதுவுடைமை ஆட்சியை நிறுவினார். ஸ்டாலினின் 'கழுகுப் பார்வை' விழுந்தால் விளைவை சொல்லவா வேண்டும்? 1937-ல் மாஸ்கோ வழக்கில்

கோ விகாரணையும் ஒன்று. குற்றவாளிகள் ரகசியமாக விசாரிக்கப்படுவார்கள். எதை எதையெல்லாமோ அவர்கள் ஒப்புக்கொண்டதாக செய்திகள் வெளியிடப்படும். மக்களிடையே செல்வாக்கு பெற்ற எவரையும் ஸ்டாலின் வாழவிட்டதில்லை. புரட்சிக்கவிஞர் மாயாகாவஸ்கிகூட 'குட்டி ஸ்டாலின்களின்' தொல்லை சகிக்கமாட்டாமல் தற்கொலை செய்துகொண்டார். வால்டேர், எமிலிசோலா போன்ற புதுமை எழுத்தாளர்களின் ஏடுகளை புனித கிருத்துவர்கள் படிக்கக் கூடாது என்று போப்பாண்டவர்கள் தடை விதிப்பதுபோல, விலக்கப்பட்ட புத்தகங்களின் பட்டியலை அடிக்கடி கிரெம்லின் வெளியிடும் ஏட்டுப் பிரதிகள் எங்கிருந்தாலும் எல்லாமே தேடிப் பிடித்து எரிக்கப்படுவது வழக்கம்.

காமனேவ், பல பகுதிகளாக வெளியிட்ட லெனின் கட்டுரைகள், ரியாஸனுவ் அச்சிட்ட மார்க்ஸிய விளக்க நூற்கள் போன்ற எண்ணற்ற 'அறிவுக் களஞ்சியங்கள்' ஸ்டாலினின் கட்டளையால் அழிக்கப்பட்டன.

புகாரின், ராடக், ஜென்ஸ்கி இன்னும்பல பொதுவுடைமை முதல்வர்களின் முன்னுரைகள் இருந்த

— 11-ம் பக்கம் —

பாதிரிகளையே கூட்டுச் சேர்த்தார் ஸ்டாலின்!

[—வடநாட்டில், 'கலக'த்தை உண்டாக்கிய 'இந்தி'க் கவிதையின் தமிழாக்கம் இது. 'சரிதா' என்ற இந்தி இதழில் இது வெளிவந்ததும் 'இராம பக்தர்கள்' 'சரிதா' பத்திரிகையின் அலுவலகத்தின்மீது படையெடுத்து ஏராளமான பொருட்சேதத்தை உண்டாக்கினார்கள். இந்தச் செய்தி, தமிழ் ஏடுகள் பல வற்றிலும் வெளியாகியுள்ளது. இதை மொழிபெயர்த்திருப்பவர், இந்தியில் 'விசாரத்' பட்டம் பெற்றவர்—]

★

இராமனின் மனப்போர்

★

மூலம்:
அரவிந்தகுமார்

தமிழில்:
ந. அலி (விசாரத்)

ஆவியினும் மேலான என்காதல் சீதை
ஆரணியம் சென்றுவிடின் எப்படிநான் வாழ்வேன் ?
தாவிவரும் அலைகளிடைச் "சேது அணை" கட்டி(த்)
தருக்களிடை வாழுகின்ற குரங்குகளைக் கூட்டி
ஏவிவிட்டேன் தென்னிலங்கை இராவணனின் மீது;
எழிலரசி, பால்கொண்ட காதலினால் ! எனினும்
காவிமலர் மேனியளாம் சீதையின்பால் கொண்ட
காதலினால் இராவணனைக் கொல்லவில்லை உண்மை !

பெருமைக்கும் ஆண்மைக்கும் சிறுமை யுண்டாக்கிப்
பெருநாடன் சீதையினைக் கவர்ந்துசென்று விட்டான்
திருத்தோளின் வலிமையினைச் செருமுனையில் காட்டித்
திரைகடல்சூழ் இலங்கைநகர் இராவணனை வென்று
திருநாட்டில் எம்மினத்தார் ஆரியரைச் சேர்க்கத்
திருவுளத்தில் எண்ணமிட்டேன். சீதைஎன்ற பேரின்
திரைமறைவில் சமர்செய்தேன். ஆதலினால் அப்போர்
திரித்துவிட்ட கற்பனையே; மேல்பூச்சே யாகும்.

கடலீந்த ஒளிமுத்தை இழந்துவிடல் முறையோ ?
களங்கமுள வெண்ணிலவை வெறுப்பதுதான் தகுமோ ?
துடியிடையாள் சீதையைநான் எவ்வாறு பிரிவேன் ?
துணையாக என்வாழ்வில் எவ்வாறு கொள்வேன் ?
அடர்காட்டின் கூடத்தில் பஞ்சவடி தன்னில்
அடியேன்மீ தவள்கொண்ட பேரன்பும் என்னே !
புடம்போட்ட பசும்பொன்னோ? பிறகலவை தானோ ?
புரியாது தவிக்கின்றேன் என்செய்வேன் ஐயோ !

மாயமானைத்தொடர்ந்து பிடித்துவரச் சொன்னாள்
மறுநொடியில் 'போ'வென்றாள், இலக்குவனைப் பின்னால்
தூயஉளம் படைத்தவளா சனகனவன் குமரி ?
சோர்ந்துவந்து பார்க்குங்கால் குடிசையிலே காணோம்
தீயஎண்ணம் தோன்றியதால் இராவணன்தான் அவளைத்
தீண்டினனோ; அவனிணங்கித் தென்னவனின் மீது
சாய்ந்தனளோ யானறியேன்; எதுஉண்மை என்றும்
தானறியேன். சனகன்மகள் சனகன்மகள் தானோ ?

ஏமாற்றும் வித்தையிலே தேர்ந்தவன்தான் எனினும்
இருந்தோளின் வலிமையிலே நிகரில்லான் அவனே.
பூமாதர் கண்டவுடன் பேராசை கொள்ளும்
பொலிவுடையான், திருவுடையான் புகழுடையான். சிவனைப்
பாமாலை யால்போற்றும் பெரும்பக்தன். நமனைப்
பலகாலம் தன்நகரில் சிறைவைத்த செம்மல்.
கோமகனும் யான்வளர்த்த பெருநெருப்பில் எரிந்தான்.
குடைநிழலின் புகழ்மட்டும் மங்கியதே இல்லை.

தென்றலிலே மணம்வீசும் நறுமலர்கள் பூத்த
திருவிடமாம் மனங்கவரும் அசோகவனந் தன்னில்
குன்றுநிகர்த் திண்டோளான் இராவணன்தான் கொண்ட
கோதையெழிற் சீதையினைச் சிறைவைத்தான். ஆங்கே
இன்பத்தின் சிகரத்தில் ஒளிவீசி நின்றாள்
எழிற்காட்சி எங்கெங்கும் கண்ணாரக் கண்டாள்.
துன்பத்தின் நிழல்கூடக் காணாத அவளோ
சோரத்தாள் அல்லவென யார்கூற வருவார் ?

உள்ளத்தின் கற்பனையே ! ஒருக்காலும் சீதை
உடலுறவால் வழிதவறி நடந்திருக்க மாட்டாள்.
எள்ளளவும் பிழைசெய்யாள். பிழைசெய்ய நேரின்
இறந்துவிடல் சிறப்பென்று கருதுபவ ளன்றோ !
முள்ளென்றும் மலையென்றும் பாராது வாழும்
மோனத்து முனிவோரும் காமத்தின் பிடியில்
துள்ளாமல் துவளாமல் சிக்குண்டார் என்றால்
தோகைக்கவ் விதியென்ன விலக்காநீர் சொல்வீர் !

எண்ணற்ற பெண்மணிகள் காமத்துத் தீயில்
எரிகின்ற வேளையிலே இவளென்ன செய்வாள் ?
கண்ணற்ற காமத்தை வெல்லவில்லை யாரும் !
கட்டுண்டார் அதன்பிடியில் உலகறியும் உண்மை !
தண்புனல்சேர் தென்னிலங்கைக் கோவேந்தன் தங்கை
'தளிர்வல்லி' என்அன்பைத் தான்வேண்டும் வேளை
எண்ணாத எண்ணமெலாம் என்நெஞ்சில் தோன்ற
ஏங்கியநான் நெஞ்சத்தை இரும்பாக்கிக் கொண்டேன்.

— 10ம் பக்கம் —

எதிரொலி

எண்ணம்

— கண்ணதாசன் —

"கன்னித் தமிழெங்கள் வண்ணமொழி-இதன்
கால மறிந்தவர் யாருமில்லை !-எங்கள்
தென்னர் புவிக்கொரு செல்வமிதே-இதைத்
தீய வடவர்கள் காணவில்லை !
அன்னை மொழி,இனம், நாகரிகம், கலை
அத்தனை யும்தனித் தன்மையையா !"-என
தன்னந் தனிப்பட மக்கள்சபை யினில்
சம்பத்துத் தோழர் முழங்கினர்காண் !

"எத்தனை சக்திகள் கூடி மிரட்டினும்
இந்தி வெறிக்குப் பணிவதில்லை-எள்
அத்தனை மானம் இருக்குமட்டும் உங்கள்
ஆதிக்க எண்ணம் பலிப்பதில்லை !
செத்த இருவரும், செந்தமிழ் காத்திடச்
சேர்ந்து சிறைசென்ற தீரர்களும்-எம்
மத்தியில் என்றென்றும் மானப்புகழ் கொண்டு
வாழ்வதை நீங்க ளறியவில்லை !

பண்டிதர் கூட்டமும் சாமிகளும் தமிழ்
பாடிக் களத்திடை ஓடியதும்-எமை
அண்டிய இந்தியின் ஆதிக்கத்தை அணு
ஆகச் சிதைத்தழித் தோட்டியதும்
கண்டபினும் இந்தக் காரியம் செய்பவர்
கண்ணிருந் தும்குரு டானவரே !-இந்தி
துண்டு துண்டாகச் சிதறிவிழும் எங்கள்
தோளில் அமர்ந்தர சோச்ச வந்தால் !

சிங்களத் தீவினைப் பார்த்தபின்னும்-ஒரு
தேச மொழிவெறி கொள்ளுவதேன் ?
எங்க ளுயிர்தனை வாட்டிடவோ ? இந்தி
எப்படி வந்திடும் பார்த்திடுவோம் !"
தங்க நடையினில் சம்பத்து இம்மொழி
சாற்றியதும் பலர்'வாழ்க' வென்றார்-அவர்
வங்க உறுப்பினர் வண்ண மராட்டியர்
வாழும்மொழி கொண்ட மற்றவர்கள் !

இந்தி வெறியை எதிர்ப்பவர்கள் தமிழ்
ஏறுகள் மட்டும்என இருந்தோம் !-இதில்
சொந்தங் கொண்டாடி வங்க உறுப்பினர்
தோள்தட்டி னரிதை என்ன சொல்வோம் !
சிந்தையில் நம்மொடு தீர மராட்டியர்
சேர்ந்து முழக்கினர் தில்லியிலே-இனித்
'தொந்தி' மொழிக்கொரு பாடைசெய்தால் அதைத்
தூக்கிட நால்வர் கிடைத்து விட்டார் !

"நாட்டி விருப்பவை அத்தனையும் வளம்
நாடிடும் தேசமொழிக" ளென்றார்-அவர்
ஏட்டி லிருப்பது இந்தி மட்டும் எனில்
இந்த முரண்பா டேன் வகுத்தார் ?
வேட்டி அவிழ்வதும் தானறியா துயர்
வீரமுழக்கு நம் மந்திரிகள்-பொருள்
கோட்டை விடுவதில் வல்லவர்கள்-இந்தக்
கோணல் இருப்பதை ஏன் மறந்தார் ?

நாடி நரம்புகள் ஓய்ந்ததடா! அவர்
ரத்தம் முழுது முறைந்ததடா !-கொடும்
பேடிமை எண்ணங் குவிந்ததடா-ஒரு
பித்துப் பிடித்துக் குலுக்குதடா !
நாடு மொழிஇனம் என்பதெலாம், பொருள்
நாடித் திரிபவர் கைகளிலே-தினம்
வாடும் நிலைதனை மாற்றிடவே கையில்
வாளெடுப்போம் ! பெரும் போர் தொடுப்போம் !

பத்து லட்சம்வரை சொத்துக் குவித்தவர்
பண்பினை எண்ணி நடப்பாரோ ?-நம்
முத்து மொழியை நினைப்பாரோ ?இனி
மூண்டிடும் போரில் குதிப்பாரோ ?
செத்துப் பிழைக்கின்ற 'தீவட்டி'கள் இதைச்
சிந்தையில் கொள்வதும் கூடுவதோ ?-மொழி
நத்திக் கிடந்திடும் நம்மவர்தான் இந்த
நல்ல பணிக்குத் தலை கொடுப்பார் !

வங்க மராட்டியர் சிங்கமென மொழி
-வாரிப் பிரிவினைப் போர்க்களத்தில்-முனம்
பொங்கிக் குதித்ததை நாம் நினைப்போம்-பெரும்
போரில் குதித்திட ஆள் குவிப்போம் !
எங்கணும் தொங்கிடும் இந்தி எழுத்தினை
ஏறி மிதித்தழித் தோட்டிடுவோம்-ஆண்
மங்கையராகப் பிறந்த அமைச்சர்கள்
வாழட்டும் ! நம்உயிர் மாண்புறட்டும் !

★

ஆசிரியரின் அன்னையார் மறைவு

தலைமை நிலைய சார்பில் இறுதி மரியாதை

ஆசிரியர் கண்ணதாசன் அவர்களின் அன்னையார் **விசாலாட்சி** அவர்கள், 23-8-'57 வெள்ளி காலை மூன்று மணி அளவில், ஏ. எல். எஸ். புரடக்ஷன்ஸ் ஸ்ரீனிவாசன் அவர்களின், சென்னை, இராயப்பேட்டை இல்லத்தில் இயற்கை எய்தினார்கள்.

கண்ணதாசன், சீனிவாசன், கண்ணப்பன் ஆகிய மூன்று ஆண் மக்களுக்கும், ஆறு பெண் மக்களுக்கும் அன்னையாரான அவர்கள், சில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார்கள்.

22-8-'57 அன்று அவர்கள் நோய் காரணமாக இராமநாதபுரம் மாவட்டம், சிறுகூடற்பட்டியிலிருந்து சென்னைக்குக் கொண்டுவரப்பட்டார்கள்.

சென்னையில் புகழ்பெற்ற மருத்துவர்கள் முயன்றும் பயனில்லாமல், வெள்ளி காலை மூன்று மணி அளவில் அவர்கள் இயற்கை எய்தினார்கள்.

செய்தியை அறிந்ததும், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், காஞ்சி. கல்யாணசுந்தரம், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, சி. பி. சிற்றரசு, இரா. செழியன், முல்லை-சத்தி, முரசொலி-மாறன், சொர்ணம், டி. கே. பொன்னுவேலு, எம். ஜி. சக்ரபாணி, சிவாஜி-கணேசன், பி. ஆர். பந்துலு, எம். கே. ராதா, கே. ஏ. தங்கவேலு, சந்திரபாபு, கே. சாரங்கபாணி, ஏ. வி. மெய்யப்பச் செட்டியார், ஏ. எஸ். ஏ. சாமி, வலம்புரி சோமநாதன், ராமநாதன் பிக்சர்ஸ் ராமநாதன் செட்டியார், கிருஷ்ணா பிக்சர்ஸ் திருப்பதி செட்டியார்-முத்தையா செட்டியார், சின்ன அண்ணாமலை, டி. எஸ். துரைராஜ், 37வது வட்ட தி. மு. க. செயலாளர் கோ. இளவரசு, ஏழுமலை, வெற்றியூர் நடராசன் செட்டியார், மற்றும் எண்ணற்ற இயக்க நண்பர்கள், படத் தயாரிப்பாளர்கள், நடிகர்களும் வந்திருந்து துக்கம் விசாரித்தனர்.

23-8-'57 மாலை 6 மணி அளவில் சவஅடக்கம் நடைபெற்றது. இடுகாட்டில் **தி. மு. கழகத் தலைமை நிலைய சார்பில் என். வி. நடராசன்** அவர்களும் 'தென்றல்' அலுவலக சார்பில் தோழர் எஸ். வீரய்யா அவர்களும், இராயப்பேட்டை தி. மு. க. சார்பில் கோ. இளவரசு அவர்களும் மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினர்.

மறுநாள் இரவில், நங்கவரத்திலிருந்து திரும்பிய அறிஞர் அண்ணா அவர்கள் கண்ணதாசனையும் அவரது சகோதரர்களையும் கண்டு ஆறுதல் தெரிவித்துச் சென்றார்கள்.

தேவி சிரித்தாள்!

கடையெழு வள்ளல்களில் ஒருவனான, பேகன் என்பானைப் பற்றிய புறநானூற்றுச் செய்தி இங்கே நாடக வடிவெடுத்திருக்கிறது. [ஆ-ர்.]

[வள்ளல் பேகனைத் தேடிப் பாணன் ஒருவன் வந்திருக்கிறான். வள்ளல் அவனுக்குப் பொருள்களை வாரி வழங்குகிறார்.]

பேகன் : *அன்பரே! ஏற்றுக் கொள்ளுங்கள் இந்த அணிமணிகளை! ஏதோ என்னால் இயன்றதைத் தந்துள்ளேன்!*

பாணன் : *வள்ளலே நீர் வாழ்க! போதும் போதும் எனச் சொல்லியும் 'கொள்ளும், கொள்ளும்' என நீர் பரிசு கொடுக்கும் பான்மையை எண்ணுகிறேன்; இன்புறுகிறேன்! வள்ளலே! சாகக் கிடந்த என்னை உயிரூட்டிக் காத்தீர்! வறுமையில் வாடித் தவித்த எனக்கு வாழ்வைத் தந்தீர்! உயிர் உள்ளவரை உம்மை நான் மறக்க மாட்டேன்! வருகிறேன், வள்ளலே வருகிறேன்!*

வள்ளல் : *சென்று வாருங்கள்!*

[வள்ளல் தனது ஆசை நாயகியான ஆய்தேவியின் வீட்டுக்குச் சென்றுவிட, வள்ளலின் மனைவி கண்ணகி தேவியும், தோழி மின்னொளியும் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்.]

மின் : *(வந்தபடி) கேட்டீர்களா அம்மா செய்தியை! வள்ளல் மீண்டும் அந்தப் பரத்தையின் வீட்டுக்குச் சென்றுவிட்டாராம்! காவலாளர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்!*

கண் : *இது தெரிந்த விஷயம் தானே மின்னொளி!*

மின் : *என்னம்மா சாதாரணமாகப் பேசுகிறீர்கள்? உங்கள் வாழ்க்கைத் தோணியை ஓர் ஊதாரி கவிழ்க்க நினைக்கிறாள்; நீங்கள் என்னவென்றால் அலட்சியமாக இருக்கிறீர்கள்! எனக்குக் கவலையாக இருக்கிறது அம்மா! ஆனால் நீங்கள்...*

கண் : *நான் கவலைப்படவில்லைதான் மின்னொளி! அதற்குக் காரணமும் உண்டு. நமது வள்ளல் எல்லா விஷயத்திலும் வள்ளலாகவே இருக்கிறார்; வள்ளலைத் தடுத்து நிறுத்த நாம் யார்? ஈவதை விலக்குவதற்கு எவரால் முடியும்? அதனால்தான் வாளாவிருக்கிறேன்!*

மின் : *என்ன இருந்தாலும், நீங்கள் மௌனமாக இருப்பது ஏமாளித்தனத்தைத்தான் அம்மா எடுத்துக் காட்டுகிறது!*

கண் : *இல்லை மின்னொளி! நான் அல்ல ஏமாளி! வள்ளல்தான் ஏமாளி; அவர் கானலை நீராகக் கருதிச் சென்று தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். உண்மையில் அவர்மேல் எனக்கு ஆத்திரத்துக்குப் பதிலாக அனுதாபமே தோன்றுகிறது. ஆனால், காலம் எப்போதும் இப்படியேவா இருந்து விடும்!*

❋

[வள்ளலைத் தேடி புலவர் கபிலர் வருகிறார்.]

கபிலர் : *ஐயா! ஐயா! வள்ளல் பேகனின் இல்லம் இதுதானே!*

ஏவலாள் : *ஆம் ஐயா! தாங்கள் யார்? தங்களுக்கு என்ன வேண்டும்?*

கபி : *நாம் ஒரு தமிழ்ப் புலவர்; பெயர் கபிலர்; பேகனைக் கண்டு பரிசில் பெற்றுச் செல்லலாம் என நினைந்து வந்தோம்; சரி...வள்ளல் உள்ளே இருக்கிறாரா? அவரைக் காணத் துடிக்கின்றன என் கண்கள்!*

ஏவ : *ஐயா! இருங்கள்; நான் உள்ளே சென்று பார்த்து வருகிறேன்!*

புல : *(ஏவலாள் சென்றபின்) ஆகா! என்ன பண்பு! என்ன அன்பு! வள்ளல் வீட்டு ஏவலரே அன்பும் அருளும் கொண்டிருந்தால் வள்ளலைப் பற்றிக் கேட்க வேண்டுமா? ஆகா! இன்று வள்ளல் பேகன் நம் கவிச் செல்வத்தை அறிந்து கொள்ளப் போகிறார்! நெஞ்சமே! இன்னும் சிறிது நாழிகை பொறுத்துக்கொள்!*

❋

[கண்ணகிதேவியும் தோழி மின்னொளியும் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது ஏவலாள் வருகிறான்.]

ஏவ : *தேவி! வள்ளலைத் தேடி புலவர் கபிலர் வந்திருக்கிறார்!*

கண் : *ஆ! புலவரா?...என்ன செய்வது மின்னொளி! எனக்கு ஒன்றும் புரியவில்லையே!...(ஏவலாளைப் பார்த்து) சரி நீ போகலாம்! நான் இதோ வருகிறேன்!*

[அவன் செல்லுகிறான். கண்ணகி தேவி விம்மியழுகிறாள்.]

மின் : *அம்மா! ஏன் கண்ணீர் விடுகிறீர்கள்?*

கண் : *கண்ணீர் விடாமல் என்ன செய்வது மின்னொளி! நமது காவலர் நம்மை வைத்து விட்டுச் சென்றிருக்கும் திருக்கதையை எண்ணும்போது கண்ணீர் விடாமல் களிப்புக் கொள்ளவா முடியும்? அருந்தமிழ்ப் புலவர் நம் அரண்மனை தேடி வந்திருக்கிறார்; அவரை உபசரிக்க நம் தலைவர் இல்லையே! வந்திருப்பவர் வளமான கவிஞர்; அவர் வருகை வருத்தமான நேரத்திலல்லவா நேர்ந்திருக்கிறது?*

மின் : *அதனால் என்னம்மா?*

கண் : *என் தலைவர் இல்லாமல் நான் மட்டும் தனியாக நின்று புலவரை எப்படி வரவேற்பது?*

மின் : *அப்படியென்றால்... வீடு தேடி வந்தவரை உபசரிக்காமல் இருக்க முடியுமா?*

கண் : *முடியாது மின்னொளி! முடியாது! புலவரை உபசரிக்கத்தான் வேண்டும்! அதுதான் முறை! காதற் கணவன் கணிகையிடத்தில் சென்று விட்டார்! இந்த இக்கட்டான நிலையில், கணவரின் கண்ணியத்தைக் காப்பாற்ற நான் புலவரைக் கட்டாயம் உபசரிக்கத்தான் வேண்டும்! மின்னொளி! ஆனால், ஒன்று! நீயும் என்னுடன் வரவேண்டும்! வா, போகலாம்!*

மின் : *சரியம்மா!*

❋

[உள்ளே சென்ற ஏவலாளை எதிர்பார்த்தபடி கபிலர் அமர்ந்திருக்கிறார். ஏவலாளைக் கண்டவுடன் பரபரப்பாக,]

புல : *(ஏவலாளிடம்) ஐயா! வள்ளல் வருகிறாரா?*

ஏவ : *புலவரேறே! சற்று அமர்ந்திருங்கள்! தங்களை வரவேற்க...வரவேற்க...எங்கள் தலைவியார் வருகிறார்.*

புல : *(ஆச்சரியப்பட்டு) என்ன? என்னை வரவேற்க வருவது உங்கள் தலைவியாரா? இந்த நாட்டின் தேவியாரா? வள்ளல் பேகனின் வாழ்க்கைத் துணைவியாரா?*

ஏவ : *ஆமாம் கவியரசே!*

புல : *என்ன அதிசயம்?... ஆமாம்...! வள்ளல் பேகன் உள்ளே இல்லையா?*

[ஏவலாள் மௌனம்.]

புல : *ஏனப்பா மௌனமாக இருக்கிறாய்? வள்ளல் எங்கே? சொல்லமாட்டாயா? அவரைக் காணத் துடிக்கிறது இந்த ஏழை உள்ளம்!*

[ஏவலாள் மீண்டும் மௌனம். இப்போது எங்கிருந்தோ விம்மல் ஒலி கேட்கிறது. புலவர் ஏறிட்டுப் பார்க்கிறார். கதவோரத்திலே வள்ளல் பேகனின் மனைவி கண்ணகிதேவியார் நின்றபடி கண்ணீர் உகுக்கிறார்.]

புல : *அம்மையே நீர் வாழ்க! உம் நிலையை நான் நன்கு அறிந்து கொண்டேன்! வள்ளல், வீட்டில் இல்லை என்பதையும் உணர்ந்து கொண்டேன்! உம் எல்லையில்லாத் துன்பம் விரைவில் 'இல்லை' என்று ஆகட்டும்! வாட்டமுற்ற உம் வாழ்வில் தேட்டம் பெருகட்டும்! நான் வருகிறேன்!*

தமிழ்ப்பித்தன்

[புலவர், வள்ளல் பேகனைத் தேடிச் செல்கிறார். வழிநெடுகத் தானாகவே பேசிக்கொள்கிறார்

வள்ளல் பேகன் உதார குணம் உடையவர் என்பது நமக்குத் தெரியும். ஆனால் வாழ்க்கைத் துணைவியைத் தவிக்கவிடுபவர் என்று நாம் எண்ணவில்லை! அன்புக்கும் அருளுக்கும் உரிய அரசியை விட்டு விட்டு யாரையோ நாடிச் சென்றிருக்கிறாரே வள்ளல்! அந்தக் காவலாட்கள் இதைத்தான் முணுமுணு என்று பேசிக்கொண்டார்கள் போலும்! தன் கடமையை மறந்து விட்ட அந்தக் காவலரை நாம் இடித்துரைக்கவேண்டும்! வீட்டரசியின் சேவை வேந்தர்க்குத் தேவை என்பதை விரைவில் அறிவுறுத்த வேண்டும்! இப்போதுள்ள நிலையில் இதுதான் நமது தொண்டு!

❋

[வள்ளல் தனது ஆசைக் கிழத்தி ஆய்தேவியின் வீட்டில் இருக்கிறார்.]

வள் : *ஆய்தேவி! நீ என்னதான் சொல்லுகிறாய் இப்போது!*

ஆய் : *என்ன சொல்லுகிறேன், தாங்கள் வீட்டுக்கு ஒரு முறை சென்று வாருங்கள் என்று சொல்லுகிறேன்!*

வள் : *என் வீட்டுக்கு என்னைச் சென்றுவரச் சொல்கிறாயா? காரணம்?*

ஆய் : *காரணம் இல்லாமலா சொல்வேன்! பாவம், கண்ணகி தேவியார் கவலைப்பட்டுக் கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பார்கள். அவர்களது கண்ணீரைத் துடைத்துக் களிப்பை ஏற்படுத்தி விட்டாவது திரும்புங்கள் பிரபு!*

வள் : *ஆய்தேவி! கண்ணகி தேவியின் மீது உனக்கேது இவ்வளவு அக்கறை?*

ஆய் : *பிரபு! உண்மையைச் சொல்லுகிறேன்; நான் ஒன்றும் சுயநலக்காரியில்லை! உங்கள் அன்பு தேவைதான் எனக்கு! அதற்காக முழுக்க முழுக்க நீங்கள் எனக்கே வேண்டுமென்பதல்ல என் விருப்பம்! தங்கள் அன்பு மனைவி கண்ணகிதேவியைப் பிரிந்து தாங்கள் ஒரேயடியாக இங்கேயே இருப்பதை வரவேற்கவில்லை என் உள்ளம். பிரபு! எனக்காகத் தாங்கள் சென்றுவரத்தான் வேண்டும்.*

வள் : *இல்லை ஆய்தேவி! எப்போது போகவேண்டும் என்று எனக்குத் தெரியும்; அப்போது நான் தப்பாமல் போய் வருவேன்!*

ஆய் : *மன்னிக்க வேண்டும் பிரபு! கணவனையும் மனைவியையும் பிரித்த கள்ளி—அரசனையும் அரசியையும் பிரித்த அநியாயக்காரி என்றெல்லாம் ஊரும் உலகமும் என்னைத் தூற்றும் என்று அஞ்சுகிறேன்.*

வள் : *அப்படிச் சொல்! ஊரும் உலகமும் தூற்றும் என்றெண்ணித்தான் என்னைச் சென்றுவரச் சொல்கிறாயா? உண்மையிலேயே உன் உள்ளம் நெகிழ்ந்துதான் சொல்கிறாய் என்றல்லவா நினைத்தேன்?*

ஆய் : *இல்லை பிரபு! தாங்கள் தவறாக நினைக்க வேண்டாம்! உண்மையிலேயே உள்ளம் நெகிழ்ந்துதான் இந்த உரையைச் சொன்னேன்; ஊருக்கும் உலகத்துக்கும் பயந்தல்ல!*

[இந்த நேரத்தில் புலவர் கபிலர் வருகிறார்.]

கபி : *ஐயா! ஐயா! வள்ளல் பேகன் இருக்கிறாரா?*

— 10-ம் பக்கம் —

கட்டபொம்மனும் கப்பலோட்டிய வ. உ. சி.யும் காங்கிரஸ்-செய்திப்படத்தில் மறைக்கப்பட்டதேன்?

இந்தியத் துணைக்கண்டத்து சுதந்திரப்போராட்ட நூற்றாண்டு விழா இம்மாதம் நாடெங்கினும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு மாநில சர்க்காரும் அந்த நூற்றாண்டு விழாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து விழாவைச் சிறப்பித்தன. அதிலும் சென்னை மாநிலம் அந்த விழாவைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடியது. நகரின் ஒரு பகுதியில் திரைக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளும், மறுபக்கத்தில்-கடற்கரையில் தமிழ்நாட்டுக்கே உரித்தான – வேறு எந்த நாட்டிலும் இல்லாத நாதசுரக் கச்சேரிகளும் நிகழ்த்தப்பட்டன. ஒரு காலத்தில் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி எழுதி விற்பனையாகாமல் கிடந்த புத்தகங்கள் எல்லாம் புதுக்கோலம் பெற்று வெளிவரத் தொடங்கின. பத்திரிகைகளில் எல்லாம் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிய செய்திகள் பெருமளவில் தெளிக்கப்பட்டு வந்தன. பெருந்தலைவர்களிலிருந்து அத்தனை பேரும் போராட்டத்தைப் பற்றியே பேசினார்கள். மக்கள் அதை கவனத்தோடு படித்தார்கள். இதையொட்டி எல்லாத் திரைப்படக் கூடங்களிலும் இந்திய விடுதலையின் போராட்டக்காதை படம் பிடித்துக் காட்டப்பட்டது. பார்த்தோர் உள்ளம் பூரிக்கத் தான் செய்தது. ஆனால் படக்காட்சியின் முடிவில் அவர்களையுமறியாமல் ஏக்கமும் துக்கமும் நெஞ்சைக் குடையத் தலைப்பட்டன. திரையிலே குதிரைகளின் குளம்படி கேட்டது. முரசு முழக்கம் ஒலித்தது. வாள்கள் மின்னலிட்டன. வெள்ளையரின் துப்பாக்கிச் சத்தம் காதைத் துளைத்தது. ஆனால் இவை அத்தனையும் வடநாட்டுப் போர்க்களத்தைச் சித்தரிப்பவையாகவே அமைந்திருந்தன.

வடநாட்டில் இன்று சோபிதமிழந்து காணப்படும் இடிந்த கோட்டைகள் காட்டப்பட்டன. இடையிடையே, உடைந்து உருக்குலைந்துபோன சிங்காதனங்களும், பீரங்கிகளால் துளைக்கப்பட்ட மதிற்சுவர்களும் படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவையும் திரையிலே வந்தன.

பகதூர் ஷா வருகிறார்!
தாந்தியாதோபி வருகிறார்!
நானா பத்னவிஸ் வருகிறார்!
நவாப்புகள் வருகிறார்கள்!

ஜான்சி ராணி போராட்டத்திற்கே கதாநாயகியாக்கப்பட்டிருக்கிறாள். அவளுடைய தோழிகள்கூட போராட்டக் காதையில் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால், தமிழர்களின் மன எழுச்சி - அவர்களின் போராட்டத்திட்டம் - அவர்கள் சிந்திய ரத்தம்-எதுவுமே அந்தப் படத்தில் இடம்பெறவில்லை.

1857 ல் சுதந்திரப் போராட்டம் துவங்கிற்று என்கிறார்கள். உண்மை அதுதானா? வடநாட்டில் புகழ்பெற்று விளங்கும் சாவர்க்கார் அவர்கள் எழுதிய சுதந்திரப் போராட்டக் காதையில் வடநாட்டுக் கலவரம்தான் சுதந்திர எழுச்சியின் வெற்றிக்குக் காரணம் என்று எழுதியிருந்தாலும், 1806 ல் வேலூரில் நடைபெற்ற சிப்பாய்க் கலகம் தான் பெரும் புரட்சிக்கு ஒத்திகையாக அமைந்தது என்று அதே நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். தென்னாட்டையே அடியோடு புறக்கணிக்கும் சாவர்க்கார் சொல்கிறார் வேலூர் புரட்சியைப் பற்றி. ஆனால் இந்தியா ஒன்று என்று பேசும் நேரு சர்க்கார் தயாரித்த படத்தில் வேலூர்ப் புரட்சி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னவன் காணிக்கை ஏதுக்கடா-என்று முழக்கமிட்ட வீரபாண்டியக் கட்டபொம்மனைக் காணவில்லை. முறத்தினாலே புலியடித்த மறத்திமகள் வேலு நாச்சியார், வெள்ளையர் பட்டாளத்தை எதிர்த்து இராமநாதபுர மாவட்டத்தில் நடத்திய போராட்ட நிகழ்ச்சிகள் படத்திலே இடம்பெறவில்லை. கானகத்துப் புலிகளைப்போல் சீற்றங்கொண்டு வெள்ளையரை ஓட ஓட விரட்டியடிக்க முனைந்த வீர மருது சகோதரர்களைக் காணவில்லை. வடநாட்டின் கோட்டைகள் காட்டப்படுகின்றன; அதே நேரத்தில் மருது சகோதரர்கள் ஒண்டிக்கிடந்த புலியமரம் தன்னுடைய மேனி முழுதும் குண்டால் துளைக்கப்பட்டுக்கிடக்கும் காட்சி படத்தில் இல்லை! படம் பார்த்தவர்கள் பொருமினார்கள். தமிழுணர்வு, கருப்புச்சட்டை பார்த்து நுழைவதில்லை; கதர்ச்சட்டை பார்த்துப் புகுவதில்லை; காவியுடையைத் தேடிப் போவதில்லை. கண்கள் படத்தைப் பார்க்கின்றன. கைகளை பிசைகிறான்; உடலம் வியர்க்கிறது. பெருமூச்சு விடுகிறான் – அவன் தமிழன்!

படத்தில் ஒரு பகுதி முடிந்தது. சரித்திர காலம் முடிந்து காங்கிரசின் காலம் வந்தது.

வட்டமேசை மகாநாடு காண்பிக்கப்பட்டது. ஸ்டாபோர்டு கிரிப்ஸ் - பெதிக்லான்ஸ ஆகியோர் பொக்கைவாய் திறந்த காட்சிகள் வந்து வந்து போயின.

காந்தியருக்குப் பக்கத்தில் சிரித்த முகத்தோடு - சோகத்தோடு-இப்படிப் பல கோணங்களில் மோதிலால்நேரு - ஆமாம் நேருப் பண்டிதரின் தந்தை! பஞ்சாப் படுகொலை! பகவத்சிங் முழக்கம்! காந்தியாரின் தென்னாப்பிரிக்காப் போராட்டம்-எல்லாம் திரையிலே வந்தன.

காங்கிரசின் அடுத்த பருவம் காட்டப்பட்டது. ராஜாராம் மோகன்ராய், லாலா லஜபதிராய், கோபாலகிருஷ்கோகலே முதலியோர் நிழல் சித்திரமாக வந்தார்கள்.

திலகர் வந்தார். அவரது தீரச்செயல்களும் காட்டப்பட்டன. அவர் நடத்திய பத்திரிகைகள் வந்தன.

திடீரென்று கையொலி கேட்டது கொட்டகையில்! வேறு யாருமில்லை. பண்டித நேரு அப்போதுதான் படத்தில் வருகிறார். வழக்கமான புன்னகை கூத்தாடியது அவரது முகத்தில்! மோதிலால் நேரு எப்படிக் காண்பிக்கப்பட்டாரோ அதைப்போல் பண்டித நேருவும் காட்டப்பட்டார். மேடையிலே நின்று லாவகமாகப் பேசும் காட்சியிலிருந்து மேனி தளர்ந்த காந்தியாருக்குப் பணிவிடை செய்யும் காட்சி வரை காட்டப்பட்டன. ஆசாத் பேசினார்! அதோ அபுல்கலாம் பேசுகிறார். அழகு தாடி ஆடுகிறது-என்று படம் பார்த்தவர்கள் குதூகலித்தார்கள். அடுத்து ராஜேந்திரப்பிரசாத் வந்தார், அதற்குப் பிறகு மகாதேவ தேசாய் வந்தார்.

கொட்டகையில் மறுபடியும் கையொலி கேட்டது. திரையிலே சுபாஷ்போஸ் ஒரு படைத்தளத்தைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தார்.

மக்கள் இதைத் தொடர்ந்து சுவையான காட்சிகள் வருமென நம்பி நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். நடந்தது என்ன?

சென்னையும் வங்கமும்தான் சுதந்திரப் போராட்டத்திற்கு முன்னின்று போராடின என்று காந்தியார் சொன்னார். ஆனால், போராட்டப் படத்தில் வங்கம் இடம்பெற்றது, சென்னையையே திரை போட்டு மறைத்துவிட்டார்கள்.

வெள்ளையரின் வெளியேற்றப் படலத்தை எண்ணினால் நமக்கு கவிக்குயில் பாரதியின் நினைவு வருகிறது. கவிமணி தேசிவிநாயகம் பிள்ளையின் உருவம் வருகிறது. சத்தியமூர்த்தியின் வீர உரையும், உருவமும் நம் எதிரே நிழலாடுகின்றன; கப்பலோட்டிய வ. உ. சிதம்பரம், சுப்பிரமணிய சிவா, திரு. வி. க. இப்படியெல்லாம் தமிழ்த் தலைவர்கள் நம் மனக்கண் முன்னே தோன்றித் தோன்றி மறைகிறார்கள். ஆனால் படத்தைத் தயாரித்த 'மேன்மை தங்கிய'வர்களுக்கு தமிழ்நாட்டின் உழைப்பே கவனத்திற்கு வரவில்லை.

இடைக்கால சர்க்கார் அமைந்த நேரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் வருகின்றன. கடைசியில் மௌண்ட்பேட்டன் சுதந்திர சாசனத்தை ஒப்படைக்கும் காட்சி வருகிறது. ஆனால் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் யார் என்று காட்டப்படவில்லை. ஆச்சாரியார் தென்னாட்டவர் என்பதாலா? ஆச்சாரியாரும், சத்தியமூர்த்தியும் இரு

நேரான தமிழ் வார்த்தை எழுதுங்கள்

கீழ்க்கண்ட ஆங்கில வார்த்தைகளுக்கு நேரான, அழகிய, சுருங்கிய தமிழ் வார்த்தைகளை எழுதி அனுப்புங்கள். இவை தமிழ் ஆட்சிமொழி வளர்ச்சிக்குப் பயன் படுபவையாக இருக்கும். உருவாகிக் கொண்டிருக்கும் மிகப் பெரும் ஆங்கில-தமிழ் அகராதிக்கும் பேருதவியாக அமையும். சரியாக எழுதப்படுபவையும், எழுதுபவர்களின் பெயரும் 'தென்றல்' இதழில் பிரசுரிக்கப்படும்.

Optimist	**Extempore speech**
Pessimist	**Amorous talk**
Sentimentalist	**Contribution (to a paper)**
Sex	**Idiom**
Protected Water Supply	**Quisling**
Saddist	**Inferiority complex**
Persuade	**Superiority complex**

'தென்றல்' : : சென்னை-6.

விற்பனையாகின்றன!

தமிழ் வாழும் இடமெல்லாம் தலைதூக்கி நிற்கும் தென்னாட்டின் வீரவரலாறு

பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார் எழுதிய

தென்னாட்டுப் போர்க்களங்கள் 8-0-0
வள்ளுவர் நிழல் 2-0-0

ஔவை நூலகம்,
4/141, பிராட்வே, சென்னை-1.

செப்டம்பர் 10ல்

நாடெங்கும் மணம் பரப்ப வருகிறது !

முல்லை

— இலக்கியத் திங்கள் இதழ் —

கண்ணைக் கவரும் மூவண்ண முகப்பு !
கருத்தைக் கவரும் எண்ணச் சித்திரங்கள் !

பன்மொழிப்புலவரின் இரண்டு படைப்புகள்
—கட்டுரையும், பெருங்கதையும்

கண்ணதாசன் எழுதும் குறுங்காவியம்.
முடியரசன், தாமரைச் செல்வனின் கவிதைகள்.
தயானந்தன் பிரான்ஸிஸ் பி. ஏ. (ஆனர்ஸ்).
ம. தங்கப்பா பி.ஏ., மு. அய்யாக்கண்ணு பி.ஏ.
இசையமுது, இரா. கோதண்டராமன்
மற்றும் பலரின் கதைகள், கட்டுரைகள்.

பக்கத்துக்குப் பக்கம் நகைச்சுவைத் துணுக்குகள் !
பயன் தருகின்ற ஆராய்ச்சிக் குறிப்புகள் !
மலையாளம், ஆங்கிலம் முதலிய பிறமொழிக் கதைகளும் உண்டு !

செந்தமிழ் மணக்கும் முல்லை !
சிந்தை கவரும் இலக்கிய முல்லை !
டெம்மி அளவில் ஏராள பக்கங்கள்-விலை எட்டே அணுதான்

முல்லை :: சென்னை-6.

துருவங்களாக இருந்தார்கள். அவர்கள் இருவருமே செய்திப் படத்தில் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த அளவுக்கு, ஆச்சாரியார், சத்தியமூர்த்தி போன்றவர்கள், தமிழ் நாட்டில் பிறந்தவர்கள் என்பதாலேயே அவர்களது தொண்டு சவனிப்பாரில்லாது போய்விட்டது என்ருல், இனிமேல் எப்படிப்பட்டவர்கள் இந்தியாவில் ஒற்றுமையை உண்டு பண்ணிஞலும் அது நிலைக்கும், நீடூழிகாலம் வாழும் என்று சொல்வதற்கில்லை. இந்த உண்மையைக் கழகம் அறிந்து நெடு நாட்களாகிவிட்டன. ஆனுல் தமிழ்நாட்டில் இயங்கிவரும் மற்ற அரசியல் கட்சிக்காரர்கள் உணர்ந்துகொள்ளவில்லை.

சட்டபொம்மன் சிலை வைக்க வேண்டுமென்கிருர்கள்; தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று சோஷியலிஸ்டுகள் போராட்டம் நடத்திஞர்கள். இவர்களெல்லாம் தென்னுடு பிரிவதிலே பெருமை கொண்டவர்களாக இருந்தால் கவலையில்லை. ஆனுல் இவர்கள் அனைவருமே, உறவுக்கு ஒரு இடமும், உரிமைக்கு ஒரு இடமும் தேவை என்றுசொல்லிக்கொள்பவர்கள். அவர்களது கவனத்திற்கு நாம் கொண்டுவருவது என்ன? 'கட்டபொம்மன் சிலை வையுங்கள் ! தமிழ்நாடு என்று பெயர் சூட்டப் பாடுபடுங்கள். இந்தியாவை விட்டுப் பிரியலாமா என்கிறீர்களே, முதலிலே இது மாதிரியான கட்டங்களில் தமிழ் நாடு புறக்கணிக்கப்படுகிறதே காரணம் என்ன என்று கேளுங்கள் ! காமராசரையல்ல ! டில்லியைக் கேளுங்கள் ! அவ்வாறு கேட்காத வரையில், நீங்கள் இங்கே நடத்தும் போராட்டத்திற்கு அர்த்தமில்லாமல் போய்விடும் ! மக்களை ஏமாற்றவே இந்த நாடகம் ! உண்மையான தமிழ்நாட்டுப் பற்று இல்லையென்று மக்கள் கருதிவிடுவர் ! முதலில் டில்லியைக் கேளுங்கள்." என்று 'பெரிய' கட்சிக்காரர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிரும். ★

'நான் எழுத்தாளன் ஆனேன்'

அடுத்த இதழில் இடம்பெறும்

நூல் நயம்

மாணவர் மன்ற வெள்ளி விழா மலர்

சென்னை, மாணவர் மன்றம், மாணவர்களுக்கென ஒரு மன்றம் அமைத்து, அவர்களின் நல்வாழ்வுக்கும் கல்வித் தேர்வுக்கும் பல வகையிலும் ஊக்கம் அளித்து, மன்றத்தையும் அதைச் சார்ந்தவர்களையும் மேன்மைக்குக் கொண்டுவந்து, இன்று 'வெள்ளி விழா' கொண்டாடி, 'வெள்ளி விழா மலரையும் சிறப்பாக வெளியிட்டு, தமிழ்த் தொண்டு செய்து வருகிறது என்ருல், உண்மையிலே அம்மன்றத்தாரைப் பாராட்டவேண்டும்.

மன்றத் தலைவர்களின் புகைப்படங்கள், வளர்ச்சிக்கு உதவியவர்களின் புகைப்படங்கள், விழாவில் கலந்துகொண்ட அறிஞர்களின் புகைப்படங்கள் அனைத்தையும் அழகிய முறையில் பிரசுரித்திருக்கிருர்கள்.

தமிழ்ப் பேராசிரியர்கள் இம்மலரில் எழுதியுள்ள கட்டுரைகள், தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டுபுரிவன ஆகும். குறிப்பாக, டாக்டர் ராசமாணிக்கஞரின் ஆராய்ச்சிக் கட்டுரை, 'பழைய காயல்' நகரின் பழஞ் சிறப்பை உணர்த்துகிறது. ஒளவை துரைசாமி அவர்கள் இன்றைய 'மலபார் போலீஸ்' படையை எவ்வாறு அரசியலார் கையாள ஆரம்பித்தார்கள் என்பதை விளக்கி எழுதியுள்ள கட்டுரை வரலாற்றுச் சான்று கொண்டு மிளிருகிறது. உரை நடை இக்காலத்தில் புதிதாக ஏற்பட்டுள்ளது என்று எண்ணியிருப்போரின் போக்கை மாற்றி, உரைநடை மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழிலக்கியத்தில் உண்டு என ஆதாரத்தோடு நிறுவுகிருர் அரங்கசாமி அவர்கள். நன்னூல் நன்னூலே அல்ல, அதன்கண் வழு இருக்கிறது என்பதை வகைபடுத்தி கூறியிருக்கும் தேவநேய பாவாணர் நமது பாராட்டைப் பெறுகிருர். கட்டுரை நடையைப் பற்றித் தெளிவான விளக்கம் தந்துள்ளார் தமிழ்ப் பேராசிரியர் திரு. தா. ஏ. ஞானமூர்த்தி அவர்கள்; அவரது விளக்கம் புதிதாய்க் கட்டுரை எழுதுபவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக அமையலாம். மூலப்பழமறையை தமக்கே உரித்தான தனிபாணியிலே விரிவான முறையிலே ஆராய்ச்சி செய்துள்ளார் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள்.

அந்தி வந்ததை அழகுறத் தீட்டியுள்ளார் கவிஞர் முடியரசன். சாதாரண ஆசிரியப்பா, அவர் கைபட்டு எழில் ஓவியமாகத் திகழ்கிறது. தமக்கே உரிய சொல் வளத்தால், பட்டினச்சேரியைப் பாங்காகத் தந்திருக்கிருர் கவிஞர்வாணிதாசன்.

பேராசிரியர், மயிலை. சிவமுத்து அவர்கள் 'செய்ந்நன்றி அறிதல்' கட்டுரை மாணவர் மன்றத்தின் வரலாற்றையும், அதற்குப் பல விதத்திலும் உதவியுள்ள பெருமக்களையும் பாராட்டும் விதத்தில் அமைந்திருக்கிறது. மன்றம் தோன்றிய வரலாற்றையும்—அது வளர்ந்து வருகின்ற பான்மையையும், நூலின் துவக்கத்திலேயே விரிவான முறையில் வெளியிட்டிருந்தால் சற்று நலமாக இருந்திருக்கும் என்று கருதுகிருேம்.

இந்த மலர், படிப்போருக்கு நல்ல தெளிவான கருத்துக்களைச் சொல்லுகிறது என்பதில் அட்டியில்லை. பயன் உள்ள மலர்! படித்துப் பாதுகாக்க வேண்டிய மலர்.

வெளியிட்டோர்:

சென்னை மாணவர் மன்றம்,
17, இரத்தின முதலி தெரு,
சென்னை-1.

விலை: குறிப்பிடப்படவில்லை.

வெண்பாப் போட்டி

3

ஈற்றடி :

கொங்கைளிக்கும் மக்கள் குணம்.

முடிவு தேதி 7-9-57

தென்றல் வெண்பாப் போட்டி :: சென்னை-6.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, எம்.ஏ., எல்.டி.

6

இப்புகுத்திடு முற்றிலும் புதிதன்று, ஏற்கனவே பத்திரிகைகளும், மொழிபெயர்ப்பு ஏடுகளும், புது எழுத்தாளர் சிலரின் புனைகதை, சிறுகதை இலக்கியமும் எடுத்தாண்டு, மக்களுக்குப் பழகிவிட்ட எழுத்துக்களையே சட்டபூர்வமாக ஏற்கிறோம் என்று அவர்கள் பதில் சொல்லக்கூடும். ஆனால் ஊன்றி நோக்கினால் இது வாதமல்ல, நியாய ஆதாரமல்ல. புகுத்திட்டு முறையின் உள்ளார்ந்த சதியையே இது காட்டுகிறது. ஏனெனில் தொல்காப்பியர் காலமுதல் இன்று வரை இலக்கணங்கள் எதுவும் இவ்வெழுத்துக்களைத் தமிழ் நெடுங்கணக்கில் உட்படுத்தியது கிடையாது. பள்ளிக்கூடத்துக்காக எழுதப்பட்ட இலக்கணங்களில்கூடத் தமிழின் மெய்யெழுத்து 18 என்று கற்பிக்கப்படுகிறதே தவிர, இவற்றையும் சேர்த்து 22 என்று கற்பிக்கப்படவில்லை. இலக்கியத்தில், செய்யுள் இலக்கியத்தில் இவ்வெழுத்துக்கள் இடம்பெறவில்லை. நல்ல உரைநடை இலக்கியத்தில் இவை இடம் பெறவில்லை. மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் பிறமொழிப் பெயர்கள் ஒலிப்பை ஓரளவு காட்ட, அதுவும் ஆதிக்க ஆட்சி மொழிகளாகவோ, கல்வி நிலைய ஆட்சிமொழிகளாகவோ இயங்கும் பிறமொழி ஒலிப்பை அப்பிறமொழி படித்தவர் அப்பிறமொழி படித்தவர்கள், திருத்த உணர்வைக் கூடிய மட்டும் புண்படுத்தாதிருப்பதற்கே இவை வழங்கப்பட்டுள்ளன. இதனால் இவை தமிழ்மொழியில் உள்ள எழுத்துக்கள் ஆய்விடமாட்டா. புனைகதை பத்திரிகையில் எழுதப்படுவதும், புகுத்திட்டு நோக்கமுடைய வடமொழியாளராலும் அவர்கள் உட்கோள் அறியாத ஒரு சிலராலும் மட்டுமே. புகுத்திடு புகுத்திட்டுக்கு ஆதாரமாகமாட்டாது.

உண்மையில் பிரச்சார மூலமாக, தங்கள் கையில் உள்ள பத்திரிகைகள், தாம் எழுதும் ஏடுகள்மூலமாக வெற்றி கரமாகப் புகுத்திடு செய்ய முடியாத நான்கு எழுத்துக்களையும் அவர்கள் தமக்கே உள்ளாதரவான அயல் பண்பாட்சி அரசியலின்மூலம் சாதித்துக்கொள்ள எண்ணுகிறார்கள். அரசியல் சட்டத்தின் உதவி கொண்டு, மக்களுக்கும் மொழிக்கும் எதிராகச் சதிசெய்ய முனைந்துள்ளார்கள். நேர் பிரச்சாரத்தால் முடியாததைப் பின்னிருந்து மறைமுகமாகக் கோழைத்தனமாகப் புகுத்தத் தலையிட்டு விட்டனர். தமிழர் தன்மானத்திற்கும், இனப் பற்றிற்கும் இது ஓர் அறைகூவல் ஆகும்.

கடைசியாக, புகுத்திடு செய்யப்படும் எழுத்துக்களின் வடிவத்தைப் பற்றிய ஒரு மறைந்துவரும் மாயச் செய்தியைக் கூற விரும்புகிறோம்.

இவ்வெழுத்துக்கள் பத்திரிகைகளிலும்,புதிய எழுத்தாளரின் புனைகதைகளிலும் எழுதப்பட்டபோது பல தமிழர்க்கு அவை புதிதாகவும், பலருக்கு ஒலிக்கமுடியாததாகவும் இருந்தது. இது பற்றிய அணிமைக் கால நாட்டுப்புறக் கேலிச்சித்திரம் ஒன்று உண்டு. பூ என்பதற்குரிய வடமொழிச்சொல் புட்பம் என்று தமிழாக்கப்பட்டு, அணிமைக் காலத்தில் புகுத்தப்பட்டிருந்தது. அதைத் திருத்தமாகப் புகுத்தீட்டெழுத்துப்படி புஃட்பம் என்றும் சிலர் எழுதிவருகிறார்கள். ஆனால் நாட்டுப்புறத்தில் வடமொழிப் பற்றுளருக்குப் புறம்பான பல தமிழ் வகுப்பினரும் அதை ஒலிக்க முடியாமல் பல குளறுபடிகள் செய்தனர். இதனை இச்சித்திரம் கேலி செய்துகாட்டுகிறது.

முழுத் திருத்தமாகத் தமக்கு ஒலிக்கமுடியாது என்று கருதிய நாட்டுப்புற வடமொழிப் பற்றுளன் ஒருவன், பிறமற்ற நாட்டுப்புறத்தார் ஒலிப்புக்களைக் கேலிசெய்து தானே கேலிக்கும் ஆளாகிறான்.

‘இதைப் பூ இண்ணும் சொல்லுவாக, புப்பம் இண்ணும் சொல்வாக, புட்பம் இண்ணும் சொல்லுவாக, ஐயா சமஸ்கிருத சொல் மாதிரியும் சொல்வாக’ என்றானும் அவன்.

இன்றும் இப்புகுத்திட்டு எழுத்துக்களைத் திருத்தமாக ஒலிக்கிறோம் என்று சுருக்கி, அதை ஒன்றுக்கு ஒன்றாக ஒலிக்கும் மக்கள், நாட்டுப்புறத்தில் மட்டுமல்ல, நகரப்புறங்களிலும் நிரம்ப உண்டு. அவர்கள் சிரிய திருத்தமான நாவில் ‘ரசம் சொகுசாயிருக்கிறது’ என்பது ‘ரஃசம் ஃசொகுஃசாயிருக்கிறது’ என்றோ, ‘ரஃட்சம்ஃட்சொகுஃட்சாயிருக்கிறது’ என்றோ, ‘ரட்சம் ட்சொகுட்சாயிருக்கிறது’ என்றோ இனிதாகச் செவிக்கு விருந்தளிக்கும்.

ஃஅ இல்லாத இடத்தில், ஃஅ ஒலித்து, ஃஅவன், ஃஇவன் என்பவரையும், ஃட்ச இல்லாத இடத்திலும் அது சேர்த்து, வடமொழி விற்பன்னர்களாக முயன்று ‘ஆஃட்ச்குக் குட்டி வந்து, வேஃட்ச்டியைத் தின்கிறது, ‘முரஃட்ச்டுக்கம்பெடுத்து ஓஃட்ச்டு, ஓஃட்ச்டு’ என்று கூறுபவரும் இல்லாமலில்லை.

இத்தகைய ஆபாசக்குளறுபடிகளுக்குள் தமிழையும், தமிழரையும் தள்ளும் இந்தப் புகுத்திடு தமிழ், தமிழரிடமிருந்து ஒதுங்கிய, அம் மாஞ்சிப் பத்திரிகைப் புகுத்திடாக வந்து வெற்றி காணுமலே விளையாடியதுபோல்,அரசியல் அதிகாரத்துடனும் செல்வாக்குடனும் தமிழர் மீதுமொழி அடக்குமுறை செய்ய வந்திருக்கிறது.

ஒலிப்பை அறியாத தமிழர்கள் இப்புகுத்தீட்டெழுத்துக்களைக் குத்து மதிப்பாகவேனும் பொது எழுத்துக்களுடன் தொடர்புபடுத்தி உரைப்பதற்கே ஒரு காரணம் உண்டு.

இவ்வெழுத்துக்கள் கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய தமிழின மொழிகளில் ஆயிர ஆண்டுகட்கு முன்பே புகுத்தப் பட்டுவிட்டன என்று கூறினோம். ஆயிர ஆண்டுகளாக அம்மொழியாளர் வடமொழிச் சொற்கள் கலந்த,தம் தாய்மொழியைத் திருத்தமாக எழுதுவதற்கு மட்டும் அந்த எழுத்துக்களைக் கையாளவில்லை. எல்லா வடமொழி எழுத்துக்களும் அத்தகைய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருந்ததனால், வடமொழி ஏடுகளை எழுதவே, அத் தாய்மொழி எழுத்துக்கள் பயன் பட்டன. தெலுங்கு, கன்னடம்,மலையாளம் ஆகிய மொழி எழுத்துக்களில் எழுதப்பட்ட வடமொழி இராமாயண, பாரத ஏடுகளை மட்டுமல்ல, அச்சிடப்பட்ட ஏடுகளைக் கூட இன்றும் காணலாம்.

தமிழின மொழிகள் வடஎழுத்துக்களை இறக்குமதி செய்யுமுன் சமஸ்கிருத ஏடுகளை எழுதுவதற்கென்றே தமிழர் ஒரு எழுத்து முறை வகுத்திருந்தனர். அதுவே கிரந்த எழுத்து. அணிமைக்காலம் வரை தமிழகத்திலும், தென்னாடெங்கும் வடமொழி ஏடுகள் எழுதப்பட்டு வந்ததும், அச்சிடப் பட்டு வந்ததும் இந்தக் கிரந்த எழுத்திலேயே. அதுவே அன்று வடமொழி எழுத்தாகக் கருதப்பட்டு வந்தது. மிகப் பழமை வாய்ந்த வடமொழி எழுத்து வடிவம் அதுவே.

இந்திக்குத் தனக்கென ஒரு எழுத்துக் கிடையாது என்று மேலே கூறினோம். உண்மையில் வடநாட்டுத் தாய்மொழிகள் அனைத்தின் நிலையும் இதுதான். அது மட்டுமன்று, வடமொழியின் நிலையும் இதுதான். வடமொழிக்கு உண்மையில் தனக்கென ஓர் எழுத்துக் கிடையாது. தமிழர் வடமொழியை இலக்கிய இலக்கணமுடைய மொழி ஆக்கிய பின்பு, அதை எழுத முதலில் பிராமி என்ற எழுத்து வடிவையும், பின் கிரந்தம் என்ற வடிவையும் அமைத்துக்கொண்டார்கள். அதற்குப்பின், வடபுலத்தார் மலைவாணரிடமிருந்து பிராமி எழுத்தின் ஒரு திரிந்த வடிவை மேற்கொண்டு, அதில் வடமொழி எழுதினர். மலைவாணர் நாகராதலால், அது நாகரி என்றும், அவர்கள் தேவர்களாகக் கருதப்பட்டதால் அது தேவநாகரி என்றும் அழைக்கப்பட்டன.

இன்று வடநாட்டில் வடமொழி எழுத்துக்களென்றும், இந்தி, மராத்தி, குஜராத்தி எழுத்துக்களென்றும் நடமாடுபவை இந்தத் தேவ நாகரியின் வடிவங்களே.

இந்தி ஆதிக்கம் தென்னகத்தில் புகுந்த பின்னர், தமிழர் வடமொழியைக்கூடத் தம் பழய கிரந்த உருவத்தில் எழுதுவதையும்,வாசிப்பதையும்விடத்தொடங்கித் தேவநாகரியை ஏற்று வருகின்றனர். தென்னாட்டவர் வழங்கிய வடமொழிக்கிரந்த எழுத்து அழிந்து வருகிறது.

புகுத்திடு செய்யப்படும் நான்கு எழுத்துக்களும், வடமொழி எழுத்துக்கள். ஆனால் புகுத்திடு செய்யப்படும் வடிவம் வடவர் வடமொழி எழுத்துவடிவான தேவநாகரி வடிவமன்று. தமிழரிடையே வடமொழி பயின்றவர் முன்னால் பயன்படுத்தி, அவர்களுக்குப் பழக்கமான கிரந்த வடிவங்களே. இந்த வடிவங்களே கிட்டத்தட்ட இன்றும் மலையாள மொழியில் இவ்வெழுத்துக்களுக்கு வழங்குகின்றன. அதுமட்டுமன்று, தமிழும்,வடமொழியும் கலந்து 13ம் நூற்றாண்டிலிருந்து ‘மணிப்பிரவாள நடை’ எழுதித் தோல்வியுற்ற வைணவ உரைகாரர் பயன்படுத்திய எழுத்தும் இதுவே.

தமிழர் வடமொழி படிக்க இந்தக் கிரந்த எழுத்துப் பயன்படவில்லை. வடமொழியில் தமிழர் தொடர்புடைய எழுத்து வடிவுகூட இருக்கக் கூடாது என்று வடமொழிப் பற்றுளர் நினைக்கின்றனர். ஆனால் தமிழர் மீது வடமொழியைப் படிப்படியாகப் புகுத்துவதால் மட்டும் அழிந்து வரும் அந்த எழுத்துக்களைக் கையாள்கின்றனர். இதில் அவர்கள் போக்கு வெளிப்படை—தமிழிலிருந்து தமிழருக்கும் முன்பு வழங்கிய வடமொழிக் கிரந்த எழுத்து, அதிலிருந்து தேவநாகரி எழுத்து!

தமிழ் எழுத்து முழுவதுமே தேவநாகரி ஆகவேண்டும் என்ற வடநாட்டவர் இயக்கம் ஒன்று உண்டு என்பதும், இங்கே தமிழரால் நினைவு கூறத்தக்கது. இந்தியப் பத்திரிகைகள் அதை ஆதரித்து அரும்பாடு படுகின்றன.

வடவரும், அவர்களுக்குப் பக்கப் பாட்டுப் பாடும் வடமொழிப் பற்றுளரும், இருசாரார் கைப்பொம்மையாய் இருக்கும் ‘அடிமைத் தமிழகம்’ அல்லது ‘சென்னை’யின் அரசியலாரும் சேர்ந்து செய்யும் இம் மொழிக் கொலை நாடகத்துக்குத் தமிழினம் தன் இனக்குரலெழுப்பி எதிர்ப்பளித்து, எழுநூறு ஆண்டுகட்குமுன் நம் முன்னோர் மணிப்பிரவாளத் தமிழை ஒழித்ததுபோல அம்முயற்சியை ஒழிப்பார்களாக.

முற்றும்.

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், எம். ஏ., எல். டி,

பதில் தருகிறார்

ஆ. ச. மாறன், திருகோண மலே (இலங்கை)

கா. அப்பாதுரையார் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'குமரிக்கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு' என்ற நூலில் 67ம் பக்கத்தில், 'இலமூரிய மக்களது நாகரிகம்' என்ற துணைத்தலைப்பின் கீழ் 'தொல்காப்பியத்தில் மனிதருக்குச் சிறப்பாகச் சொல்லப்பட்ட ஆறும் அறிவையும், சிவபெருமானது நெற்றிக்கண்ணையும் இது நினைப்பூட்டுவது காண்க' என இலமூரியா மக்களின் நெற்றியில் இருக்கும் வாதுமைப் பருப்பளவுபுடைப்பை உவமானப்படுத்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து சிவபெருமான் என்றொருவர் இருந்தாரென்றும், அவருக்கு மூன்று கண்களுண்டென்பதும் புலனாகின்றது. உண்மைதானா ? விளக்கம் கூறவும்.

அங்கே கருத்தே சுட்டப்பட்டது. மூன்று கண்ணுடையவர் என்ற மரபு ஒற்றுமை, அத்தகைய மனிதர் இருந்தமைக்கோ கடவுள் இருப்பதற்கோ சான்றாகாது. இலெமூரியாவில் அவ்வாறு இருந்ததாகக் குறிப்பவர் மேனாட்டறிஞர். அதன் சின்னமாகத் தமிழ்த் தெய்வம் ஒன்று பற்றிய தமிழர் கருத்தே அங்கே மரபு வலியுறுத்தாகக் குறிக்கப்பட்டது.

இத்தகைய ஆராய்ச்சிகள் கருத்துப் பற்றியது. சமய உண்மைகளுக்கு வரலாற்று விளக்கம் தேடுவதாகக் கூறி அவற்றை ஏற்பனவர்கவோ, மறுப்பனவாகவோ கொள்ளப்படத்தக்கவை அல்ல.

பண்டைத் தமிழினத்தவர் முக்கண்மரபே நெற்றியில் பொட்டும், குறியும் இடும் தற்கால வழக்கத்துடனும் தொடர்புடையதென்று கூறலாம். ஏனெனில் இந்திய மாநிலம் தவிர, வேறெங்கும் இவ்வழக்குக் கிடையாது. அது- மட்டுமல்ல. வடதிசையில் வைணவ சமயம் தெற்கிருந்து பரவியபின்பே, பரவிய அளவிலேயே இவ்வழக்குப் பரவியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய மரபு ஆராய்ச்சிகள் பிற ஆராய்ச்சிகள்போல முடிவுபடுத்தும் ஆராய்ச்சிகள் அல்ல. முடிவு தேடும் ஆராய்ச்சிகள். இயைபியல், இயங்கியல் ஆகியவற்றில் காட்சித்தேர்வு, செயல்தேர்வு ஆகிய முறைகளால் செல்லும், ஆராய்ச்சிவான நூலில் பெரிதும் காட்சித்தேர்வு ஒன்றுடனே நிற்க நேர்வது போல, மரபாராய்ச்சியாளர் ஊக வலியுறுத்து முறையால் திசையறிவதுடன் ஆராய்ச்சி முறையில் தற்காலிகமாகவாவது அடையவேண்டியவராவர்.

❋

ஆர். எஸ். பிரகாசம், பரமக்குடி.

கந்தழிதான் கடவுளாக மாறியது என ஒருவர் எழுதியுள்ளாரே, கந்தழி என்பதன் பொருள் யாது? எப்படி, யாரால், எதற்காக அப்படி மாறியது ?

கந்தழி கடவுளாக மாறவில்லை, சொல்லிலும் சரி, பொருளிலும் சரி. கந்தழி, கடவுள், இறைவன், இயவுள், வள்ளி என்பன முழுமுதல் கடவுளைச் சுட்டிய பல தமிழ்ச் சொற்கள். ஒவ்வொன்றும் ஒரு கருத்தடிப்படை கொண்டது. கந்து என்பது பற்று. பற்றழிப்பவன் கடவுள். 'பற்றுகபற்றற்றான்பற்றினை, அப்பற்றும் - பற்றுக பற்றுவிடற்கு' என்ற குறட்பாவின் கருத்தை, இப்பொருள் விளக்குகிறது. கடவுள், இறைவன் இரண்டு சொற்களும் 'கட', 'இற' ஆகிய கிட்டத்தட்ட ஒரே பொருளுடைய இரு பகுதியின்தொழிற் பெயர்கள். வாழ்வு கடந்து நிற்கும் குறிக்கோளை அவை உணர்த்தும். 'வழிபாடு' என்ற தமிழ்ச்சொல் இப்பொருளை-தமிழர் கடவுட் கருத்தையும், வழிபாட்டுப் பண்பையும்-வலியுறுத்திக் காட்டும். இயவுள் 'இய' என்னும் வேர்ச் சொல்-இயங்கு, இயக்கு என்பனவற்றின் மூலமுதல்-அடிப்படையாக இயக்கும் ஆற்றல் என்றும் பொருளைக் குறிக்கும். 'வள்ளி' வளர்ச்சி, வளம், வண்மை ஆகியவற்றின் சொல்லடியாகிய 'வள்' என்ற பகுதியடிப்படையானது. பொங்கல் வளம் அளிப்பதுஎன்பது குறிப்பு.

கந்தழி சில நூல்களிலும், கடவுள் சில நூல்களிலும், இயவுள் சிறுபான்மையாகவும், வள்ளி இன்னும் அருகியும் வழங்கியுள்ளன. இவற்றுள் ஒரு சொல் முந்தியது, ஒன்று பிந்தியது என்று நிலைநாட்டுதல் கூடச் சரியன்று. இது கால வேறுபாடு மட்டுமன்று; இடவேறுபாடு, ஆள்வேறுபாடு, தற்செயல் வழக்கு வேறுபாடு ஆகியவும் சார்ந்தவை ஆகலாம். இதனடிப்படையாக மிகப்பெரியோரெல்லாம் ஆராய்ச்சி முடிவு தேடியுள்ளனராயினும், இத்தகைய ஆராய்ச்சி பயனுடையதேயாயினும், இவற்றின் பெரும்பகுதி ஒரு செப்படி வித்தையாக அமைந்துள்ளதேயன்றி வேறன்று. இவை உண்மை சுட்ட உதவக்கூடும். உண்மை காணத் துணைசெய்யக் கூடும். உண்மை நிலைநாட்ட ஒரு சிறிதும் உதவமாட்டா.

சங்க இலக்கிய மரபுகள் பல இன்றளவும் நம்நாட்டில் நிலவுகின்றன. ஆனால் இடைக்கால இலக்கியத்தில் வழக்கிழந்தன என்பதை எவரே அறியமாட்டார் !

—1ம் பக்கத் தொடர்ச்சி —

'சான்றோன் எனக் கேட்டதாய்!'
—நிமிர்ந்து நடக்கிறாள்!
—திருமணம் முடிகிறது...
—நாட்கள் நகருகின்றன...
மகனுக்கு 'பையன்' பிறந்திருக்கிறான்!
ரத்தினமாகச் சொலிக்கிறான் !
மகன் போராட்டத்துக்குப் பேரானாம்!
ஐயோ! அவனை அடித்துவிட்டார்களாம் !
துப்பாக்கியால் சுட்டுவிட்டார்களாம் !
அட பாவிகளா ! நீங்கள் நல்லா இருப்பீர்களா ?
ஒங்க தலையிலே இடிவிழ !
என் தங்கமகனை அடித்தீர்களே!
உடம்பில் நூல்பட்டாலும் தாங்க மாட்டானே !
அப்படி வளர்த்தேனே !
சிறையிலே போட்டுவிட்டார்களாம் !
நான் இப்பொழுதே மகனைப் பார்க்கவேண்டும்.
ஐயோ ! ஐயோ !
ஒருத்தி சொல்கிறாள்.
"பயப்படாதே தாயே !
ஊரெல்லாம் உன் மகனைப் பற்றியே பேச்சு !



அவன் வாழ்க ! வாழ்க ! என்கிறார்கள் !
கூட்டத்தில் பேசுகிறார்கள், அவனைப் பற்றி !
துணிச்சலான பிள்ளை பெற்றவள் நீ !
நல்ல கூட்டத்தில்தான் சேர்ந்திருக்கிறான் !
கவலைப்படாதே !
திருச்சி போனேன்.
மதுரை சென்றேன்.
சென்னையில் கேட்டேன்.
உன் மகனே பேச்சு ! எங்கும் அதுவே !
அவன் உன் மகன் அல்லவா?"
தாய் சிரிக்கிறாள்; நிமிர்கிறாள் !
அவளும் வீராங்கனையாகிறாள் !
"தடியால் அடித்தவன் கையை முறிக்கணும்.
துப்பாக்கியால் சுட்டவன் தோளை முறிக்கணும்."
—நாட்கள் மிதக்கின்றன... நடக்கின்றன...
தாய், நோயின் பிடியில் !
என் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் !
சாகுமுன் ஒருதரமாவது பார்க்க வேண்டும் !
வருவார்களா ? எழுதியிருக்கிறார்களா ?
இன்னும் காணோமே !
என் மக்களைச் சந்திக்காமலே இறந்துவிடுவேனா ?
தகவல் சொல்லவேண்டும் !
தந்தி கொடு ! என்னால் தாங்க முடியவில்லை !
இப்பொழுதே பட்டணத்துக்குப் புறப்படுவோம் !
பிள்ளைகளைப் பாராமல் நான் சாகக்கூடாது !
புறப்படு ! புறப்படு ! புறப்படு !
....
"தம்பீ ! தம்பீ !"
"நான் பார்த்துவிட்டேன் ! இனி நிம்மதியாச் சாவேன் !"
"அக்கா தங்கச்சிகளை கவனிச்சுக்கங்க !"
"ஐயோ ! அம்மா ! உடம்பு வலிக்கிறதே !"
"மூச்சுத் தடுமாறுகிறதே ! மூச்சு வரவில்லையே !"
"டாக்டரைக் கூப்பிடு ! ஐயோ ! அம்மா !"
"நான் சாகப்போகிறேன் ! ஆமா ! ஆமா !"
"தம்பிகள் எங்கே ?"
"தம்பி ! அழாதே ! அழாதே !"
"சின்னமுள்ள தம்பீ சிந்தை உருகாதே !"
நன்றாகத்தான் பேசுகிறாள்...
சிறிது நேரந்தான்...
நாக்குக் குளறுகிறது...
வார்த்தை மழலையாகிறது...
ஏதோ சொல்கிறாள்...
என்னம்மா சொல்கிறாய் ?...
வார்த்தை வரவில்லை...
தொண்டை கம்முகிறது...
அம்மா ! அம்மா ! அம்மா !
ஒன்பது குழந்தைகளின் ஓலம்...
கண்கள் விழிக்கின்றன...
உதடு இழுத்துக்கொள்கிறது...
சாகர—ஒலி சிறிது சிறிதாகி...
வாய் திறந்தபடியே...
கண்கள் விழித்தபடியே...
அன்னை அசையவில்லை...
ஓலம் ! ஓலம் ! அவலஓசை !
அம்மா ! அம்மா !
இனி என்று காண்போம்...
என்ன சொல்ல நினைந்தாயோ !
சொல்வதற்குள் மறைந்தாயே !
சிதை எரிகிறது...
மேனி நீறுகிறது...
'பெருங்கதை' முடிகிறது...
'சிறுகதைகள்' தேம்புகின்றன !

ஏஜண்டுத் தோழர்களுக்கு

ஆகஸ்ட் மாதப் பட்டியல் அனுப்பப்பட்டிருக்கிறது. செப்டம்பர் 15ந் தேதிக்குள் பட்டியல் தொகை அனுப்பி வைக்காத தோழர்களுக்கு முன்னறிவிப்பின்றி பத்திரிகை நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—நிர்வாகி.

— 3ம் பக்கத் தொடர்ச்சி —

மாமன்னர் குலப்பெருமை காப்பாற்ற வேண்டும்
மக்கட்கு நல்லவனாய் நடந்திடவும் வேண்டும்.
காமத்தில் வாழ்வெல்லாம் கழித்துவிட்ட பின்னர்
கடைசியிலே கள்ளுண்ணும் குடத்தையெலாம் உடைத்த
மாமன்னர் என்தந்தை அரசமுறை தன்னை
மறுபடியும் இந்நாட்டில் மேற்கொள்ள வேண்டும்
கோமுறைக்கும் அறத்திற்கும் அஞ்சியஞ்சி நானும்
கொன்றுவந்தேன் என்னுளத்தின் எண்ணங்கள் யாவும்.

நெறிதவறி நடந்திருக்க மாட்டாளோ சீதை?
நெருப்பின்மேல் அன்னவளை வீற்றிருக்கச் செய்து
குறிப்பெல்லாம் நன்குணர்ந்தேன்; என்றாலும் மனதைக்
குடைகின்ற சந்தேகம் நீங்கியபா டில்லை
நிறைதூக்கம் எனக்கில்லை; மனஅமைதி இல்லை;
நீளின்ப இசைப்பாக்கள் சுவைதரவு மில்லை.
மறைக்காமல் உரைக்கின்றேன் என்னுளத்தில் இன்னும்
மாறாத சந்தேகம் உறுத்துகிற தம்மா!

தேனில்லா மலருக்குச் சிறப்பில்லை என்பார்
சீதையிலா என்வாழ்வும் வெறும்வாழ்வே யாகும்!
கானில்வாழ் மான்விழியைக் காணாமல் இருந்தால்
கண்களுக்கும் உறக்கமில்லை அவளுக்கும் அதுவே!
ஏனிந்தத் தொல்லையென அன்னவளைக் கண்டால்
இதயத்தில் முள்ளாகத் தைக்குதையோ! நானும்
வானோக்கி எரிகின்ற வளர்தீயில் கிடந்து
வாடுகின்றேன் இந்நிலைக்குக் கொடுநரகே நன்று.

பொய்சொல்லி ஏமாற்றி இந்நிலையி னின்று
புரையில்லா இராமனென்ற பெயரெடுக்க வேண்டும்.
செய்யாத பலகுற்றம் என் வாழ்வில் செய்தேன்
தீயசெயல் இன்னொன்று செய்துவிட்டால் என்ன?
''பொய்போலும் இடையாளை'த் தேடிச்சென் றங்கே
பொன்மேனி வாலியினை மறைந்தேதான் கொன்றேன்.
செய்நன்றி கொன்றமகன் வீடணனைக் கொண்டு
சீராளன் ரகசியங்கள் பலவற்றைக் கண்டேன்

பால்போலத் துணிவெளுக்கும் வண்ணானின் மீது
பழிபோட்டுச் சீதையைநாம் வனம்அனுப்ப வேண்டும்.
''ஆல்போலக் குடியாட்சி தழைத்தோங்க, மக்கள்
ஆசைகளை மாமன்னன் நிறைவேற்ற வேண்டும்''
கோலோச்சும் நான் இன்று இதுபோல நடித்து(க்)
குவலயத்தை ஏமாற்றி, குலப்பெருமை காத்து
நூலிடையாள் சானகியை வனம்அனுப்ப வேண்டும்
நுண்ணியஎன் சூழ்ச்சிதனை மறைத்துவிடல் வேண்டும்.''

தமிழர் அன்றும் இன்றும்

விலை ரூ. 0-4-0 (25 பைசா)

ஆசிரியர்: **புலிக்கொடியான்** (சிங்கப்பூர்)

தமிழரின் முன்னாட் பெருமையையும் இந்நாளில் உள்ள நிலைமையையும் ஆசிரியர் தெளிவாக விளக்கியுள்ளார். பல புள்ளிவிபரங்களுடன் கூடிய சிறு நூல். தனிப்பிரதி வேண்டுவோர் 31 பைசாவுக்கு ஸ்டாம்ப்அனுப்ப வேண்டுகிறோம். வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.

மற்ற தமிழ் நூல்கள் அனைத்தும் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும். விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.

ராஜேஸ்வரி புத்தக நிலையம்,
மைலாப்பூர், சென்னை-4.

சிங்கப்பூரில் கிடைக்குமிடம்:
M. N. இருளப்பன், ராயல் தியேட்டர் புக்ஸ்டால்,
635-A, நார்த் பிரிட்ஜ் ரோடு, சிங்கப்பூர்-7.

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

வள்: ஆய்தேவி! வாசலில் யாரோ தேடி வந்திருக்கிறார்கள்! இரு; யார் என்று பார்த்து வருகிறேன்!

புல: வணக்கம் வள்ளலே! நாம் ஒரு தமிழ்ப் புலவர்! பெயர் கபிலர்! தம்மைக் கண்டு செல்ல வந்தோம்!

வள்: கபிலரா? மிக்க மகிழ்ச்சி! கபிலரே! தங்கள் வரவு நல்வரவாகட்டும்! பல நாட்களாகத் தங்களைப் பார்க்க நினைத்தேன்; இன்றுதான் அது இயன்றது! தாங்கள் என்னைத் தேடிவந்த நிலை கண்டு நான் இறும்பூதெய்துகிறேன்...யார் அங்கே? புலவருக்குப் பொன்னும் மணியும் நிறையக் கொண்டு வா!

புல: வள்ளலே, மன்னிக்கவும்! பொன் பொருள் தேடித் தங்களைப் பார்க்க வரவில்லை... ஆனால்...

வள்: ஆனால், என்ன புலவரே! தயங்காமல் சொல்லவும்.

புல: முதலில் பொன் தேடித்தான் புறப்பட்டோம்; புண்ணான நெஞ்சம் கொண்டு புவியில் புழுங்கி வாழ்கின்ற பேதைப் பெண்டிரைக் கண்ட பின்னர், பொன்னையும் பொருளையும் வெறுத்துத் தள்ளிவிட்டது எம் பேதை நெஞ்சம்! வள்ளலே! நேற்று நாம் நமது உறவினரோடு உம் இல்லம் நோக்கிச் சென்றோம்! பரிசில் பெற நின்றோம்; ஆனால், அங்கே நாம் கண்ட காட்சி! அப்பப்பா! எம்மை ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி அப்படியே வாட்டி வதைத்துவிட்டது! வேந்தே! தலைவன் வரவேற்க வேண்டியிருக்க, விட்டுத் தலைவி வந்து வரவேற்ற காட்சி—தலைவனை யாரோ திருடிக்கொண்டு விட்டார்கள் என்பதை அந்தத் தலைவி வாயால் சொல்லாமல் கண்ணால் சொல்லிய மாட்சி—ஆகியவற்றை எண்ணும்போது இப்போதுகூட எம் கண்களில் கண்ணீர் வருகிறது! உம் நாட்டு மக்கள் மகிழ்கிறார்கள் வளம்பெற்று! ஆனால் உம் மனைவி வருந்திச் சாகிறாள் துயருற்று! அவளை வாட விடுவது உமது ஆண்மைக்கு அழகில்லை! அவளை ஏங்க விடுவது உமது இயல்புக்கு ஏற்றதல்ல!

[இப்போது ஏவலாள் வருதல்.]

ஏவ: அரசே! பரணர், பெருங்குன்றூர் கிழார், அரிசில் கிழார் ஆகிய புலவர்கள் தங்களைத் தேடி வந்திருக்கிறார்கள்.

வள்: அவர்களை வரச்சொல்!

[புலவர்கள் வருதல்.]

மூவரும்: வள்ளலே வணக்கம்!

வள்: வரவேண்டும் புலவர் சிகாமணிகளே!

மூவரும்: அடடா! கபிலர்கூட வந்திருக்கிறாரே! கபிலரே வணக்கம்!

கபி: வணக்கம், வணக்கம்!

வள்: பரணரே! தாங்கள் அடியேனை நாடி வந்தது கண்டு மகிழ்கிறேன்...

பர: நீர் மகிழலாம் வேந்தே! நாம் அப்படியில்லை!

வள்: புலவரே! என்ன இது? ஏன் என்மீது கோபம்?

பர: கோபப்படாமல் குணமாகவா இருக்க முடியும் வேந்தே?

திருத்தம்

சென்ற இதழ் எண்ணாம் கவிதையில் 57ம் வரியில் அணுவெங்கும் வேல் கொண்டு தாக்கினால் என்றிருக்கிறது. அது, அணு வெங்கும் வேல் கொண்டு தாக்கினாலும் என்றிருக்க வேண்டும்.

வள்: தாங்கள் என்ன சொல்கிறீர்கள் புலவரே!

பர: வள்ளலே உமது அதிசயமான குணநலனை எண்ணி நாம் வியக்கிறோம்! மழையில் ஆடிய மயிலொன்றின் மேல் இரக்கம் கொண்டீர்! அதற்குப் போர்வை தந்து காத்தீர்! ஆனால், அழகு மங்கை—அன்புக்குரிய நங்கை—வாடுகிறாள் உமைப் பிரிந்து! நீர் இரக்கமில்லாமல் எங்கேயோ வந்து தங்கியிருக்கிறீர்! உம்மை நாம் நாடி வந்தது பரிசில் பெறுவதற்கன்று! உமக்கு உண்மையை உணர்த்திச் செல்லவே வந்தோம்! எனவே, நீர் எமக்குப் பரிசொன்றும் தரவேண்டாம்! உமது மனைவியின் துயரத்தை நீர் ஒழித்துவிட்டால் அதுவே நாம் பெறும் பரிசில்! உடனே செல்வீராக! நாம் சொன்னதைச் செய்வீராக!

வள்: ஆகட்டும் புலவரே!... பெருங்குன்றூர் கிழாரே, தாங்கள் வந்த நோக்கம்...?

பெரு: நமது நோக்கமும் இதுவே! கேளும் வள்ளலே! நாம் நுமது இல்லம் சென்றோம்! பண் இசைத்தோம்; அதைக் கேளாமல் அங்கே மாதொருத்தி புலம்பிக் கொண்டிருந்தாள். கண்ணீர் விட்ட அப்பெண்ணைக் காரணம் கேட்டோம்! உம் செயல் சொல்லி அழுதாள் அந்த நேரிழை! உமைப் பிரிந்து துயர்படும் அத்தோகையை நீர் சென்றடைந்தால், அதுவே நீர் எமக்குத் தரும் பரிசாகக் கொள்வோம்! வள்ளலே இதைச் செய்வீரா?

வள்: அப்படியே!... அரிசில் கிழாரே! தாங்கள் வந்த காரணம்...?

அரி: உம்மிடம் பரிசில் பெற வரவில்லை வள்ளலே! உமது பரிசில் உம்மிடமே இருக்கட்டும்! அது எமக்கு வேண்டாம்! உம்மைக் காண நாம் வந்தது இந்தப் பொன்னுக்காகவும் பொருளுக்காகவும் அன்று; ஓர் உத்தமியின் வாழ்வு வளம் பெற வேண்டும் என்பதற்காக! வள்ளலே! உம்மைப் பிரிந்த துயரத்தால் வாடி நோகும் உம் வாழ்க்கைத் துணைவியைக் காண்பீராக! அவள் துயரைப் போக்குவீராக! இதுதான் நாம் உம்மிடம் மன்றாடிக் கேட்கும் பரிசில்!

வள்: புலவர்களே உங்களுக்கு நன்றி! எங்கேயோ இருட்குகையிலே அடைபட்டுக் கிடந்த என்னை ஒளி வீசும் வெளி உலகுக்குக் கொண்டு வந்துவிட்டீர்கள்! இனி ஒரு கணமும் என் உயிர்த்துணையைப் பிரியமாட்டேன். இது உறுதி! நான் வருகிறேன்!...யார் அங்கே! தேர் தயாராகட்டும்!

[வள்ளல் புறப்பட்டுச் செல்கிறார். புலவர்கள் ஆனந்தக் கண்ணீர் விடுகிறார்கள்.]

அழகோவியம் அலங்கோலமானதேன் ?

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

பாவத்திற்காக ஆயிரக்கணக்கான ஏடுகள் எரிக்கப்பட்டன. இதனைக் குறிப்பிடும்போது 'இதே வேகத்தில் போனால் புத்தக சாலையின் அலமாரிகள் காலியாகிவிடுமென்றே நினைத்தேன்' என்கிறார் அலெக்சாண்டர் பார்மைன்.

விசித்திரமான முறையிலே அப்போது ஸ்டாலினே, தான் எழுதியிருந்த ஒரே ஒரு நூலை மாற்றி எழுதி பதிப்பித்தார்.

போராட்ட காலத்தில், சோவியத் தேசிய இனங்களின் விடுதலை உறுதியாக்கப்பட்டது. உரிமைப் பிரகடனத்திலே லெனின் இதனைத் தெளிவாக்கியிருந்தார்.

"ரஷ்யாவிலிருந்து பின்லாந்து, போலந்து, உக்ரைன் ஆகியவை பிரிவதால் அதனால் கெடுதி ஒன்றுமில்லை. அதில் கெடுதி என்ன இருக்கிறது? அப்படி எவரேனும் சொல்வதாயிருந்தால் அவர்கள் பிறநாடுகள் வாழக்கூடாது என்று எண்ணும் அகங்கார வெறியர்களாகத்தான் இருக்கவேண்டும்." இது லெனினின் கட்டுரைக் குறிப்பு. ஆட்சி கைக்கு வந்ததும் ஸ்டாலின் கூட்டு ஒப்பந்தத்தை மீறினார். தேசிய இனங்களின் விடுதலை உணர்ச்சி மொட்டிலேயே கருகடிக்கப்பட்டது. இன உரிமைக்காக போராடிய வீரர்கள் மற்ற இனங்களுக்கு எச்சரிக்கையாக நாற்சந்துகளில் தூக்கிலிடப்பட்டார்கள். அலெக்சாண்டர் பார்மைனின் நூல் இதனைத் தெளிவாக விளக்குகிறது. பிரசித்தி பெற்ற 1937 ல்

கோட்டைக்குள் எழுந்த குழப்பம்

மட்டும் கரேலியன், வெள்ளை ரஷ்யா, அட்ஜார், டாட்ஜிகிஸ்டான், ஜார்ஜியா, உஸ்பெகிஸ்டான் போன்ற பதிமூன்று குடியரசுத் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். தேசிய சுயநிர்ணயமும், பிரிந்து செல்லும் உரிமையும் ஏட்டளவிலே நின்றன. பிரிவினை என்ற குரல் எங்கும் எழுந்தாலும் அடக்குமுறை தர்பார் நிகழ்த்தப்பட்டது. தேசிய இனங்களின் பிரச்னைக்கு ஸ்டாலின் மதிப்பு தரவில்லை. 'சிக்கலை அவிழ்க்க முடியாவிட்டால் அறுத்துவிடு' என்ற தத்துவம் அவருக்கு அரசியல் வேதமாயிருந்தது! இங்கு வடநாடு செழிப்பதுபோல சோவியத்தில் ரஷ்ய தேசிய இனம் கொழுப்பேற்றப்பட்டது. ஸ்டாலினே, இந்த இனவெறியை வளர்த்து வந்தார் என்றுகூடச் சொல்லலாம்.

'உலக சரித்திரத்திலேயே அதிகமானவர்களை கொலைக்களத்திற்கு அனுப்பிய பெருமை ஸ்டாலினையே சேரும்' என்று மைக்கேல் கர்லி குறிப்பிடுவதில் தவறில்லை.

தனி மனித சுதந்திரம் கேலிக்கூத்தாக்கப்பட்டு, இயக்கத்தின் தலைப்பிள்ளைகளை 'அடக்கம்' செய்துவிட்டு ஸ்டாலின் 'சமதர்மம்' பேசினார்:

"பிரஜைகளின் உயிர்களே ஒரு அரசாங்கத்தின் எல்லா செல்வங்களைவிட மேன்மையானது!"

மேன்மையான உயிர்களைத்தான் ஸ்டாலின் சோஷியலிச சமரச பூமிக்கு எருவாக பயன்படுத்தினார். அவரால் உலகையே ஏமாற்ற முடிந்தது!

நாட்டைச் சிதைத்து கேட்டைத் தந்தது!

பாரோக்களின் நினைவாக நாம் எகிப்து பிரமிட்டுகளைப் பார்க்கிறோம். பழைய தொழிலாளரின் உழைப்பின் உருவாக தாஜ்மஹால் காட்சியளிக்கிறது. ஸ்டாலின் தமது நினைவுச்சின்னமாக மனிதர்களின் மண்டையோடை வைத்துப் போயிருக்கிறார்!

அரசியலிலே இத்தனை நாற்றமிருந்தபோது சமுதாய மகிமையை சொல்லவா வேண்டும்? சோவித் 'ராஜாங்கம்' மனிதனின் நிழலோடு மரண பயத்தையும் உலவவிட்டது! மதத்தின் மிகப் பெரிய எதிரியாக வாழ்ந்தார் லெனின். ஸ்டாலினோ பாதிரிகளோடு பேரம் பேசினார். புரட்சி வெற்றி பெற்றதும் பீட்டர்ஸ்பர்க் தேவாலயத்தில் அளிக்கப்பட்ட 'பொற்சிலுவை மரியாதையைக்கூட' லெனின் ஏற்றுக் கொள்ளவில்லை. வைதீகத்தின் பச்சோந்திப் பண்பை அவர் உணர்ந்திருந்தார் ஸ்டாலின் மதத்தை நிலைபெறச் செய்து பாதிரிகளை தமது புகழ்பாட வைத்தார்! ரஷ்ய தேவாலயங்கள் இன்று அரசியலாரின் பிரச்சாரக் கிடங்குகளாக விளங்குகின்றன! எத்தனை முரண்பாடுகள் இருந்தாலும் ஆதிக்க வாதிகளும், புரோகிதர்களும் மக்களை கொடுமைப்படுத்துவதில் ஒன்றுகிவிடுவார்கள்!

லெனின், ஜார் பரம்பரையை வெறுத்தார். பீட்டர், காதரின், யுவாங்போன்றோருக்கு ஸ்டாலின் மக்களிடையே சிரஞ்சீவித்துவம் வழங்கினார். மண்ணிலே புதைந்து கிடந்த எலும்புருவங்கள் தோண்டியெடுக்கப்பட்டு பூச்சரங்களாக அணிவிக்கப்பட்டன!

கலை, இலக்கியம், நாடகம், திரை அரசாங்கம் இன்னபிற துறைகளிலும் ஸ்டாலினின் கொடு நிழல் படிந்தது. பிடிக்காத எதையும் அழிக்கும் பண்பு மாயாகவஸ்கி போன்றோரை வாழவிடவில்லை. அந்த 'கம்யூனிச ரசிப்புத்தன்மை' வாழ்த்துப் பாடல்கள் எழுதிய துக்கடாப்புலவன் கோல்சேவை கொண்டாடிப் புகழ்ந்ததிற்கு கேட்கவா வேண்டும்? 167 மொழிகளில் ஸ்டாலின் மகத்துவம் சொல்லும் அந்தக் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டன!

"ஓ! ஸ்டாலினே! ஒளியின் இருப்பிடமே! எங்களது இனிமையான இளமைக்காக தங்களுக்கு நன்றி!" மழலைக் குழந்தைகளுக்கு இத்தகைய பாடல்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டன!

'ஞானாசிரியரே! சமதர்ம பிதாவே! எல்லோரது புகழுக்கும் பாத்திரமானவரே!' — பத்திரிகைகள் இந்த அடைமொழிகளை தினமும் எழுதின.

தமது தாய்மொழி தவிர வேறு மொழிகள் தெரியாத அவர் அரிஸ்டாட்டிலின் வாரிசாக, கதேக்குப்பின் தோன்றிய மிகப் பெரிய அறிஞனாக கொண்டாடப்பட்டார்.

ரஷ்யாவில் உயர் பதவியிலிருந்த விக்தர் குருசெங்காவ், பிரான்சில் நடந்த விசாரணையின்போது அளித்த வாக்குமூலத்தின் ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது.

"நான் தொழிலாளர் பரம்பரையைச் சேர்ந்தவன். பழைய பொதுவுடமைவாதி; சோவியத் கம்யூனிசம் பற்றி எனக்கு நேரடியான அனுபவம் இருக்கிறது. தொழிலாளியாகப் பிறந்து மதிப்புமிக்க பதவிபெற்ற என் பயணம் நீண்டது! ஆகவே தெளிவாக நான் உலகத்திற்குச் சொல்கிறேன். கிரெம்லினின் தலைவர்களும் சிட கோடிகளும் சோவியத் மக்களிடமிருந்து புரட்சியின் நல்ல விளைவுகளைக் கொள்ளையிட்டு, அவர்களை அடக்கி ஆள்கிறார்கள்! மக்களின் உழைப்பை - அதன் அறுவடையை தட்டிப்பறித்து ஆதிக்க வாசிகள் மனிதர்களை வெறும் அரசியல் ஆயுதங்களாக மாற்றியிருக்கிறார்கள்!"

—குருசெங்காவ் தனது ஏடு முழுதும் ஏராளமான நிகழ்ச்சிகளை விவரிக்கிறார். சோவியத் அதிகாரிகளை சந்தித்தபோது அங்கே பிரபல தலைவர் புகாரின் வந்திருந்ததையும் குறிப்பிட்டிருக்கிறார்.

மக்களிடையே மூன்று பிரிவினர் இருப்பது தெளிவு. ஸ்டாலின் நான்காவதாக அதிகாரவர்க்கத்தை புதிதாகப் படைத்தார். இவர்களின் உல்லாசத்திற்காக மற்ற பிரிவினர்கள் பலியிடப்பட்டார்கள்! ஊதியம் என்ற பெயரால் பெரும் தொகைகள் அதிகாரிகளுக்கு பங்கிட்டு வழங்கப்படுகின்றன. இவர்களின் குழந்தைகளுக்காக தனி பள்ளிக்கூடங்களும், மருத்துவ விடுதிகளும் உள்ளன. எல்லாத் துறைகளிலும் விசேட சலுகைகள் வேறு தரப்படுகின்றன. இன்றைய சோவியத்தில் இவர்கள் 'பூதேவர்களாக' வாழ்கிறார்கள்!

சாமான்யன் 'சமதர்மம்' என்ற இனிப்பான வார்த்தையை மட்டும் கேட்கிறான். பள்ளிக்கூடத்திலிருந்து, படுக்கையறை வரை 'கட்சி ஆதிக்கமும் அதன் வெறியும் நிழலாடுகின்றன. 'ப்ராவ்தா' 'இஸ்வெஸ்தியா' போன்ற பத்திரிகைகள் மக்களது லட்சியங்களை உருவாக்குகின்றன. எல்லா நாடுகளிலும் மனிதன் பிறப்பான்! சோவியத்திலே மனிதன் ஸ்டாலினிஸ அச்சிலே வார்த்தெடுக்கப்பட்டான்!

மாக்ஸிய தத்துவம் ஸ்டாலினின் கோணல் சிந்தைக்கு இரையானதும் இயக்கத்தின் பல தலைவர்கள் தாயகத்தைவிட்டு வெளியேறினார்கள்.

பெரியாவும் மாலன்கோவும் ஸ்டாலினின் அத்யந்த சீடர்கள்; 'திறமைசாலிகள்!' என்று அவரே புகழ்ந்திருக்கிறார். இருவருக்குமிடையே பதவிப் போட்டி இருந்தது. அப்போது படைத்தளபதியாயிருந்த புல்கானின் மாலன்கோவை ஆதரித்ததால் பெரியா தோல்வி கண்டார்!

ரஷ்யாவிலே புதிய அணிவகுப்பு வலிமை பெற்றது. இருபத்திஐந்து ஆண்டுகளாக ஸ்டாலினின் ஆதிக்கத்தால் அழுத்தப்பட்டுக்கிடந்தவர்கள் அந்த பயங்கரத்தை—துன்பங்களின் தொடர்கதைகளை உலகத்திற்கு சொல்ல துடித்துக்கிடந்தார்கள். குருசேவ் இவர்களில் முதல்வர். மாலன்கோவ் உறுதியான ஸ்டாலினிஸ்ட்; கருத்து வேற்றுமையால் வெளியேறினார். தளபதி புல்கானின் அமைச்சரானார். குருசேவ் இவரோடு சேர்ந்தார். 'ஸ்டாலினிசம் மாக்ஸியமல்ல; அது ஒரு சர்வாதிகாரச்சின்னம்!' என்ற குருசேவின் சொற்பொழிவை பத்திரிகைகள் பிரசுரித்தன. மாஸ்கோ இசைத்தட்டுகளை திருப்பித் திருப்பிப் போட்டு தொல்லை கொடுத்தவர்கள் திகைத்துப் போய்விட்டார்கள்! ஸ்டாலினால் சிதறடிக்கப்பட்ட ரத்தம் தங்களது விரல்களிலும் படிந்திருந்த உண்மையை உலக கம்யூனிஸ்டுகள் அப்போதுதான் உணர்தார்கள்!

குருசேவ் குழுவினரிடம் ஸ்டாலினைவிட அதிகப்படியான ஜனநாயகம் இருந்தது. உலக நாடுகளை சுற்றி மக்களோடு அவர்கள் புதிய தொடர்பு கொண்டார்கள். சர்வாதிகாரியின் காலத்திலேலே அடங்கிக் கிடந்த தேசிய இன எழுச்சி கீதம் மீண்டும் ஒலித்தது. குருசேவ்கூட தேசிய இனங்களின் 'குறைந்த பட்ச' விடுதலையை வரவேற்றார்.

போலந்தில் ஸ்டாலினிஸ்டுகளை வீழ்த்திவிட்டு, புதிய கருத்தினர் ஆட்சியை கைப்பற்றினார்கள். குருசேவ் இவர்களோடு நல்லுறவு கொண்டார். எதிர்பாராதபடி அங்கேரியில் புரட்சி கொந்தளித்தது. இதனை சாமான்ய முறையிலே சமாளிக்க முடியாததால் ரஷ்யாவின் பெரும்படையே கொண்டு வரப்பட்டது. மார்ஷல் சுக்காவ் அங்கேரியில் பிணங்களைக் குவித்தார்!

ரஷ்யாவில் மிஞ்சியிருந்த ஸ்டாலினிஸ்டுகள் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தினார்கள். போலந்து, அங்கேரி சம்பவங்களை சுட்டிக்காட்டி அவர்கள் குருசேவ் குழுவினரை குற்றம் சாட்டினார்கள். இருபதாம் காங்கிரஸிற்குப் பிறகு குருசேவால் வீழ்த்தப்பட்ட ஸ்டாலின் பதுமை மீண்டும் எழுந்துவிடுமளவிற்கு நெருக்கடியான நிலை பிறந்தது. மறைந்த குருநாதரின் கொள்கையை உயிராக மதிக்கும் மாலட்டோவ், ககனோவிச், மாலன்கோவ், ஷெப்பிலாவ் ஆகியோர் அதிகாரத்தைப் பெற முயற்சித்தார்கள்.

107 மத்தியக்குழு உறுப்பினர்கள் மாஸ்கோ வந்ததாக செய்தி சொல்கிறது. நிகழ்ச்சியில் கலந்துகொண்ட 225 உறுப்பினர்களில் ஒருவரேனும் 'ஸ்டாலினிஸ்டுகளை' ஆதரிக்கவில்லை. பரிதாபமான சம்பவம்தான்! சரித்திரம் எத்தனைவிசித்திரமாக பழிவாங்கி விடுகிறது!

புது வாழ்வை விரும்பும் உலக மக்களுக்கு சோவியத் ரஷ்யா நிறைய படிப்பினைகளைத் தருகிறதே தவிர பாதை காட்டவில்லை; ஏனெனில் ரஷ்யாவே நீண்ட தூக்கத்திலிருந்து இப்போதுதான் விழிப்படைந்திருக்கிறது!

அரசியலிலே பதவிப் போராட்டம். சமுதாயத்தில் இருள் இன்னும் மடியாத நிலை. பொருளாதாரத் துறையில் உற்பத்தி பெருக வேண்டும் என்ற ஒரேபல்லவி.

இந்த மூன்றும் முற்போக்கு நாட்டின் இலக்கணங்களல்ல; மாக்ஸிய தத்துவம் சமதர்ம ஒளி வழங்கவில்லை; சர்வாதிகாரிகளைத்தான் உற்பத்தி செய்தது! ★

பதிவு எண்: எம். 6529

தென்றல்

16 ... 31-8-57



2. பூச்சூடிப் போவாள் புறம்.

தாயும் கிழமானாள்; தன்மகளுந் தாயானாள்;
காயும் பழுத்த ஈசையானாள்-ஆயுங்கால்
ஆச்சி அவள் இனிமேல் ஆசையுடன் எவ்வாறு
பூச்சூடிப் போவாள் புறம்!

—குகன் குருசாமி, கமுதி.

❁

தம்மகனின் நச்சரிப்பும் தத்துறுத்தும் நல்குரவும்
விம்மும்சேய் வேதனையும் விஞ்சுங்கால்-அம்மையவள்
கூச்சலினை எண்ணாது கூந்தலினி லெவ்வாறு
பூச்சூடிப் போவாள் புறம்?

—சா. சுலோசனா, திருமயம்.

❁

விந்தியத்தின் தெற்கேதன் வித்தையைக் காட்டவரும்
மந்தமதி இந்தியெனும் மங்கையினைச்-செந்தமிழாள்
பேச்சாலே வென்றுவிட்ட பேரெழிலை முன்தாங்கிப்
பூச்சூடிப் போவாள் புறம்.

—பா. நாராயணசுவாமி, கரந்தை.

❁

கன்னித் தமிழதனைக் காற்றில் பறக்கவிட்டுப்
புன்மொழியாம் இந்தியதைப் போற்றுகிறார்-தன்மனைவி
பூச்சுக் குறைந்ததனால் போவானே தேனில்லாப்
பூச்சூடிப் போவாள் புறம்.

—சா. ரிச்சர்ட்லேட், நாமக்கல்.

❁

கஞ்சிதனைக் கையேந்தி, காடடைந்து நேராக்கி
கொஞ்சுமொழிப் பாலகனைக் கொஞ்சவரும்-வஞ்சியவள்
பேச்சன்றி வேறறியாள், பூச்சுதனில் மூழ்கிப்பின்
பூச்சூடிப் போவாள் புறம்.

—சி. மாணிக்கம், பல்லடம்.

❁

என்னருமைச் செல்வி இடுகுழியில் தூங்குகிறாள்;
என்புருக யானோ துடிக்கின்றேன்-தன்மழலைப்
பேச்சினிலே தேன்பொழிவாள்; சாகாமல் இன்றிருந்தால்
பூச்சூடிப் போவாள் புறம்.

—செ. கிருஷ்ணசாமி, அரக்கோணம்.

❁

வாழ்வெல்லாம் இன்னல், வறுமைத்தீ பற்றிடினும்
தாழ்வுற்றுத் தன்கணவன் சோர்ந்தாலும்-சூழ்ந்தாலும்
தீச்சிந்தைக் காமுகர்கள், சால்புடைப்பெண் கற்பென்னும்
பூச்சூடிப் போவாள் புறம்.

—வான்துளி, பழைய சிலுக்குவார்பட்டி.

❁

பண்டைத் தமிழ்ப்பெண்ணின் பண்புகேள்! தன்கணவன்
சண்டையிலே வெற்றிச் சங்கொலித்து-வென்றபுகழ்
மூச்சோடு தேரில் முரசடித்து வந்தாற்றான்
பூச்சூடிப் போவாள் புறம்.

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

❁

அந்தி வரவேற்றாள் ஆளனுக்குப் பள்ளியறைச்
சந்தனத்தைக் கூட்டிச் சதிராட-ஏந்திழையாள்
இச்சை மிகுந்தாள், எழிற்றென்றலேபோவாய்
பூச்சூடிப் போவாள் புறம்.

—சோம. திருநாவுக்கரசு, நாச்சியாபுரம்.

❁

அன்ன நடையும் அடிக்கோர் அசைவுங்கொள்
வன்னமயிற் சாயல் வனிதையவள்-கன்னலெனும்
பேச்சினாற் காளையரின் பேராவி தான்கொள்ளப்
பூச்சூடிப் போவாள் புறம்.

—தாம்பரக்கிழான், சென்னை.

❁

முந்தி ஒருமுறை முத்தமிழ்க் கின்னலென
இந்தி புகுந்தனள்; இன்றுமவள்-வந்துவிடின்
பேச்சில்லை இங்கே; பிணமாய் இனிஅரளிப்
பூச்சூடிப் போவாள் புறம்.

—தொல்காப்பியன், அகரப்பேட்டை.

❁

கொல்லும் விழிகொண்ட கோல மணிச்செல்வி
வெல்லத் தமிழாலே வென்றென்னைச்-செல்கின்றாள்;
மூச்சும் உளத்தோடு முன்னேறி ஓடுதையோ
பூச்சூடிப் போவாள் புறம்.

—சிவ. அருள், சென்னை.

❁

தலைவன் வரக்கண்டாள்; தன்னகத்தி லின்பம்
அலைமோத அன்னையறி யாமல்-கலையுடுத்தாள்;
கச்சணிந்தாள்; கற்றைக் குழலிலினிக் கண்கவரும்
பூச்சூடிப் போவாள் புறம்.

—பனை. சண்முகம், நெற்குப்பை.

❁

வடமொழி யாமிந்தி வண்டமிழர் நாட்டில்
இடங்கொண்டால், ஆர்த்தெழுந்து ஈன்றாள்-தடக்கைவாள்
வீச்சால் எறிந்து,மண் விண்ணதிர மாய்ப்பதற்குப்
பூச்சூடிப் போவாள் புறம்.

—க. வி. வரதராசன், சென்னை.

❁

துன்பிலும் நீங்கார் தொடர்புடையார் என்றவுரை
நன்கறியாப் பண்பதனால் நல்லுடலைத்-துன்னாது
மூச்சும் நடந்ததையோ! முல்லை நகைகாட்டிப்
பூச்சூடிப் போவாள் புறம்.

—கோ. சீனுவாசன், குடந்தை.

❁

பத்து மணியளவில் பாவையவள் சாளரத்தில்
நித்தம் கொடுப்பாள் நிலவொளியை-முத்தழகி!
மூச்சு விடுமுன்னே முந்நூறு வார்த்தைசொல்லிப்
பூச்சூடிப் போவாள் புறம்.

—பழனி ராதா, கும்பகோணம்.

❁

கண்கண்ட காதலன்தான் காடேகிப் போனபின்
பெண்ணேஎன் செய்வாள் பிதற்றாமல்?-கண்கலங்கி
மூச்சின்றிப் பேச்சின்றி, வீழுமவள் எப்போது
பூச்சூடிப் போவாள் புறம்?

—கி. கண்ணன், அகரப்பேட்டை.

❁

காவியத்தில் தேர்ந்துள்ள கன்னித் தமிழ்நங்கைக்
கூவி நகைக்கும் குறைமொழிகள்-குன்றியபின்
ஆவி குளிர்ந்தே அழகுத் தமிழணங்கு
பூச்சூடிப் போவாள் புறம்.

—அரங்கநாதன், கீழ்பென்னாத்தூர்.

❁

எண்ணெயில்லை, சீப்பில்லை; ஈவார் எவருமிலை;
பெண்மணிக்குப் பின்னலிடப் போதில்லை-வண்ணமுள
பூச்சரத்தை ஈந்தாலும் பூங்கொடியாள் எவ்வாறு
பூச்சூடிப் போவாள் புறம்?

—ந. அலி, துறையூர்.

❁

வெட்டும் விழி அழகே! வீசும் இளங்காலே!
தொட்டுனைப் புல்லத் துடிக்கின்றேன்-கட்டழகி
மூச்சால் முகம்சேர்ப்பாய் ஊடல்ஏன்? என்றதுமே
பூச்சூடிப் போவாள் புறம்.

—மாணிக்கம். முத்து, பாலப்பாடி.

❁

பூங்காவுள் வந்துவிட்ட பூநாகம் இந்திப்பெண்;
தூங்குகிற செந்தமிழா தோள்தட்டு!-அங்கமெலாம்
நச்சோடிப் போயிருக்கும்; நங்கையவள் அச்சமெனும்
பூச்சூடிப் போவாள் புறம்.

—மன்னர்மன்னன், தாம்பரம்.

❁

அன்னைத் தமிழ்மாது அல்லற் படுகின்றாள்
இன்னுமோ தூக்கம்? எடுவாளை-இன்னார்
தோற்றோடிப் போய்மடிய தூயதமி ழாள்வாகை(ப்)
பூச்சூடிப் போவாள் புறம்.

—சின்னசாமி, காந்திநகர், மேட்டூர் அணை.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம். 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.